# சுதந்திரன்

SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 2009
மாசி 21
ரபி. அவ். 24
ஞாயிறு (5-3-1978)
நிறுவியது 1947
புத்தகம் 31
இதழ் 77
யாழ். தொ.பே.இல. 352
விலை சதம் 60


# சிங்களவரிடையே சரிந்துவரும் செல்வாக்கை

# சரிக்கட்டுவதற்கு

# பிரிவினைத்

# தடை சட்டம்

நாட்டுப்பிரிவினை கோருவதை தடைசெய்யும் சட்டமொன்றைக் கொண்டுவந்து நிறைவேற்றுவதன்மூலம் சிங்களமக்கள் மத்தியில் சரிந்துவரும் தனது செல்வாக்கை நிமிர்த்துவதற்கு அரசாங்கம் தீவிரமாக ஆலோசித்துவருவதாகத் தெரிய வருகிறது. இப்படியொரு சட்டத்தை நிறைவேற்றுவதன் மூலம் தன்னை சிங்களமக்களின் இரட்சகனாகவும், அதேசமயம் தமிழர் விடுதலைக்கூட்டணியின் விரோதியாகவும் காட்டி சிங்கள மக்களிடையே சரிந்துள்ள தனது செல்வாக்கை மீண்டும் சரிக்கட்டி விடமுடியும் என்று அரசாங்க வட்டாரங்கள் எதிர்பார்க்கின்றனவாம்.

முந்திய அரசாங்கத்தினால் ஏழு ஆண்டுகளாக தொடர்ந்து அமுல் செய்யப்பட்டு வந்த தரப்படுத்தல் முறையை இப்போதைய அரசாங்கம் நீக்கியுள்ளதாக (வாயளவில்) அறிவித்துள்ளதை எதிர்த்தும், தரப்படுத்தல் முறையை நீடிக்கவேண்டுமென்று கோரியும் சிங்களவர் மத்தியில் பெரும் கிளர்ச்சியும் கொந்தளிப்பும் ஏற்பட்டுள்ளது. செல்வாக்குள்ள பௌத்தபிக்குகள், சிங்கள இளைஞர் மாணவர் இயக்கங்கள் அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் போன்ற இயக்கங்கள் தரப்படுத்தல் நீடிக்கவேண்டுமென்று வற்புறுத்தி கிளர்ச்சி செய்துவருகின்றன.

தமிழர் விடுதலைக்கூட்டணியின் நெருக்குதலுக்கு பணிந்துதான் அரசாங்கம தரப்படுத்தலை நீக்கிவிட்டதாகவும் சிங்கள மக்களிடையே திட்டமிட்டபிரசாரம் முடுக்கிவிடப்பட்டுள்ளது.

தரப்படுத்தல் ஆதரவு இயக்கத்தின் பின்னணியில் அரசாங்கத்தை கவிழ்க்கும் சதித்திட்டம் இருந்ததை கண்டுகொண்ட அரசு இந்த இயக்கத்தை நசுக்குவதில் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டதுடன், இருதினங்கள் பாடசாலைகளையும் வளாகங்களையும் மூடி மாணவர் கிளர்ச்சிகளை முறியடித்தது.

இருந்தபோதிலும், தரப்படுத்தல் நீக்கப்படக்கூடாது, நீடிக்கவேண்டும் என்று அரசாங்கத்தை ஆதரிக்கும் பௌத்தபிக்குகளும், பௌத்த சங்கங்களும்கூட பிரசாரம் செய்துவருகின்றனர்.

வோருக்கு தண்டனை வழங்கவும் கூடிய சட்டமொன்றை கொண்டுவந்து நிறைவேற்றுவதன்மூலம் சிங்களமக்களின் இரட்சகனாகவும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் விரோதியாகவும் தன்னை சிங்களமக்களிடையே விளம்பரப்படுத்தி, வீழ்ந்த செல்வாக்கை மீண்டும் நிமிர்த்தி விடமுடியும் என்று அரசாங்க வட்டாரங்களில் ஆலோசிக்கப்பட்டுவருகிறதாம்.

## அரசு அவசர ஆலோசனை?

தரப்படுத்தல் நீக்கப்படுவதால் (வாயளவில்என்றாலும்) சிங்கள மக்களிடையே அரசாங்கத்துக்கு ஏற்பட்டிருக்கும் செல்வாக்கு இழப்பை ஈடுசெய்யவும் தமிழர் விடுதலைக்கூட்டணிக்கு அரசு விட்டுக்கொடுக்கிறது என்ற பிரசாரத்தையும் முறியடிக்கவும் அரசாங்கம் ஒரு புதிய தந்திரத்தை கையாளவிருக்கிறதாம்.

அதாவது நாட்டுப்பிரிவினை கோருவதை தடைசெய்யவும், தடையை மீறு

அரசியலமைப்புக்கு கொண்டுவரப்படும் திருத்தங்களிலே ஒன்ருக இந்தப் பிரிவினைத்தடைச் சட்டமும் அமையக்கூடும் என்று அரசியல் வட்டாரங்கள் எதிர்பார்க்கின்றன.

## காசி ஆனந்தன் 4-வது மாடியில் விசாரணை!

உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன், கடந்த வாரம் கொழும்பில் வைத்து, நான்காவது மாடிக்கு சி. ஐ. டி.யினரால் அழைத்துச் செல்லப்பட்டு விசாரணைக்குட்படுத்தப் பட்டதாக தெரிகிறது இதே போல், தமிழ்இளைஞர் பேரவை கொழும்புக் கிளையை சேர்ந்த ஆ. ரகுபதிபாலசிறீதரனும், மூன்று நாட்கள் சி.ஐ.டி. விசாரணைக்குட்படுத்தப் பட்டுள்ளார்.

# நீதியமைச்சரின் மகன் குற்றவாளியென கண்டுபிடிப்பு

### மட்டக்களப்பு நீதிமன்றம் தீர்ப்பு

நீதியமைச்சர் திரு. கே, டபிள்யூ. தேவநாயகம் அவர்களின் மகனும் சட்டத்தரணியுமான திரு. எஸ். எம். தேவநாயகம் மட்டக்களப்பு நீதிமன்றத்தில்நடைபெற்றவழக்கு விசாரணையொன்றின் போது குற்றவாளியாகக் காணப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு நீதிமன்றத்தில் தொழில்புரியும் இளம் சட்டத்தரணியும் பாரிஸ்டருமான திரு. எஸ். எம். தேவநாயகம் ஏறுவூரைச் சேர்ந்த மரண விசாரணை அதிகாரி திரு. பி.நல்லரெத்தினம் என்பவரை ஏமாற்றிப் பணம் பெற்றதாக மட்டக்களப்பு பொலிஸ் விசேட குற்றப்புலனாய்வுப் பிரிவினால் இவ்வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

இவ்வழக்கை விசாரிக்கவென விசேடமாக கம்பஹா மாவட்ட நீதிபதி திரு. எல். டபிள்யூ.ஆர்.வைத்தியரத்ன வந்திருந்தார்.

எதிரியான திரு. தேவநாயகம் தரப்பில் ஆஜரான திரு. குமார் பொன்னம்பலமும், பொலிஸ் தரப்பில் ஆஜரான ஜனாப்.எப்.எச்.எம்.அஷ்ரப்பும் கடந்த வெள்ளியும் சனியும் சட்டப் பிரச்சினை


—8-ம் பக்கம் பார்க்க


# தமிழ் உத்தியோகமொழி ஆக்கப்படமாட்டாது!

# தமிழ் பிரதேசத்துக்கு சுயாட்சியும் கிடையாது!

### அரசியலமைப்புக்கு வெறும் கண்துடைப்பு திருத்தம்

தமிழ்மொழிக்கு உத்தியோக மொழி அந்தஸ்து வழங்கும், அல்லது தமிழ்பிரதேசங்களுக்கு சுயாட்சி வழங்க வழிவகுக்கும் எவ்வித திருத்தங்களும் அரசியலமைப்புக்கு கொண்டுவரப்பட மாட்டாது என்று திட்டவட்டமாகத் தெரியவருகிறது.

அரசியலமைப்புக்கு கொண்டுவரப்பட வேண்டிய உத்தேசதிருத்தங்கள் பற்றி தெரிவுக்குழு ஆராய்ந்து முடிவு செய்துவிட்டதாகவும், இதன்படி தமிழை உத்தியோக மொழியாக்கும் திருத்தம் பற்றியோ, தமிழ் மாநிலங்களுக்கு சுயாட்சி வழங்கக்கூடிய திருத்தம் பற்றியோ தெரிவுக்குழு ஆராயக்கூட இல்லையென்றும் கூறப்படுகிறது.

தமிழ் மக்களுக்கு தாம் ஏதோ உரிமை வழங்குவதாக வெளியுலகுக்கு காட்டிக் கொள்வதற்காக — ஒரு சில கண்துடைப்பு திருத்தங்கள் கொண்டுவரப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளதாம். இத்திருத்தங்களின்படி தமிழுக்கு தேசிய மொழி அந்தஸ்து அளிக்கப்படுவதுடன், 1966ம் ஆண்டின் தமிழ் மொழிப்பிரமாணங்களும் அரசியலமைப்பின் ஒரு பகுதியாக இடம் பெறுமாம். இது தவிர தமிழினத்துக்கு வேறு எதுவும் வழங்கப்படமாட்டாது என்று நம்பகமா[illegible]கத் தெரிய வருகிறது. இந்தக் கண்துடைப்பு சலுகைகளுடன் சேர்த்து, பிரிவினைத்தடைச் சட்டத்தையும் நிறைவேற்றிவிட இப்போது ஆலோசிக்கப்பட்டுள்ளதாம்.

அதாவது தமிழ்மக்களுக்கு தாம் ஏதோ நீதிசெய்வதாக காட்டிக்கொண்டு, தமிழினத்தின் சுதந்திரக்கோரிக்கையின் குரல்வளையைத் தடைச்சட்டமூலம் நெரித்துவிட திரைமறைவில் ஆலோசிக்கப்பட்டு வருகிறதாக அரசியல் நோக்கர்கள் தெரிவிக்கின்றனர்.

தமிழுக்கு உத்தியோக அந்தஸ்து வழங்கப்படமாட்டாது என்ற செய்தியை "இன்டிப்பென்டன்ற்" ஆங்கில ஏடும் சென்ற வாரம் வெளியிட்டிருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கிய உலகில் .....

# மணியனுக்கு ஏன் தடுமாற்றம்

உலக நாடுகளெல்லாம் சுற்றித்திரிந்து அனுபவங்களைத் திரட்டி, அவற்றைக்கொண்டு சுவையான பயணக்கட்டுரைகளை வடித்து அவற்றை ஆனந்த விகடனிலே எழுதி தனக்கென தமிழ் வாசகர்கள் மத்தியில் தனியான இடத்தைப்பிடித்துக் கொண்டவர் எழுத்தாளர் — பத்திரிகாசிரியர் திரு. மணியன் அவர்கள் என்பதிலே யாருக்கும் இரண்டு வித கருத்துக்கள் இருக்கமாட்டாது.

எல்லா நாடுகளைப்பற்றியும் எழுதுகிறாரே இந்த மணியன், ஆனால் இலங்கையைப்பற்றி இன்னும் எழுதவில்லையேயென்று குறைப்பட்டுக் கொண்ட வாசகர்கள் நிரம்ப இருந்தனர். ஆனால் மணியன் அவர்கள் இலங்கை பற்றித்தப்பும் தவறுமாக ஏதாவது எழுதித் தொலைப்பதைவிட — எழுதாமலிருப்பதே மேல் என்று எனக்குள்ளே நான் எண்ணியிருந்தேன்.

முன்பொருமுறை இலங்கைக்கு வந்தபோது, "நாவலரைத் தெரியுமா?" என்று இங்குயாரோ ஒருவர் கேட்ட கேள்விக்கு —யாழ்ப்பாணத்தில் பொதுவாக 'நாவலர்' என்று கூறும்போது யாரைக்குறித்துக் கூறுகிறார்கள். என்பதிலே தனக்குள்ள தெளிவின்மை காரணமாக,— "நாவலர் என்றால் நாவலர் நெடுஞ்செழியனையே குறிக்கும்" என்று வெகுளித்தனமாக பதிலளித்து, இங்குள்ள எழுத்தாளர்களின் கண்டனத்துக்கு ஆளானவர் திரு.மணியன் என்பதை நான் மறந்துவிடாததாலேயே—அவரது இலங்கைப் பயணக்கட்டுரையில் தவறான கருத்துக் கணிப்புக்கள் இடம் பெறுவதை விட அவர் அப்படியான கட்டுரையை எழுதாமலே இருந்தால் பரவாயில்லையென்று நான் கருதியிருந்தேன்.

இப்போது தமது சொந்தப்பத்திரிகையான 'இதயம் பேசுகிறது' வார இதழில் இலங்கைப் பயணக் கட்டுரைகளை திரு; மணியன் எழுதி வருகிறார். இதுவரை ஆறு, ஏழு கட்டுரைகள் வெளிவந்து விட்டன! அவற்றைப் படித்தபோது நான் கொண்டிருந்த அச்சம் உண்மையாகி வருவதுபோலத் தோன்றுகிறது.

முதலாவதாக—'இலங்கை'யை "சிறீலங்கா சிறீலங்கா" என்று திரு. மணியன் தமது கட்டுரையில் குறிப்பிட்டு வருகிறார். போதாக்குறைக்கு ஓர் இடத்தில் இந்நாட்டின் பெயரை "சிங்களம்" என்றும் குறிப்பிட்டிருக்கிறார்; இது இங்குள்ள தமிழர்களின் இதயங்களை வேல் கொண்டு தாக்குவதாக உள்ளது.

இந்த நாட்டின் இப்போதைய பெயர் "சிங்களமும்" அல்ல; "சிறீலங்காவும்" அல்ல; ஒரு வேளை "தமிழ் ஈழம்" பிரிந்து போனபின்னர், எஞ்சியுள்ள நாட்டை "சிங்களம்" என்று அழைத்தால் அதிலே தவறில்லை; ஆனால் இப்போது நாட்டின் பொதுவான தமிழ் பெயர் 'இலங்கை'யே!

இலங்கை அரசியல் சட்டத்தின்உத்தியோகபூர்வமான தமிழ் மொழிபெயர்ப்பிலும் இந்த நாட்டின் பெயர் "இலங்கை" என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. மணியன் மட்டுமல்ல—தமிழ் நாட்டில் வேறு பலபத்திரிகைகளும், இலங்கையை "சிறீலங்கா" என்றே தவறாக குறிப்பிடுகின்றன. திரு. மணியன் அவர்கள் தமது தவறை உணர்ந்து எதிர்காலத்தில் இலங்கையை "சிறீலங்கா" என்றோ "சிங்களம்" என்றோ குறிப்பிடாது, "இலங்கை" யென்றே குறிப்பிடுவார் என்று எதிர்பார்ப்போம்!

மற்றது—இலங்கையின் சமுதாய அரசியல் பிரச்சினைகளைப்பற்றி திரு. மணியன் தமது கட்டுரைகளில் குறிப்பிடும் போது ஈழத்தமிழர்களின் உண்மையான நிலையை எடுத்துக்காட்ட வேண்டும்; அன்றேல் அரசியல் பற்றி அவர் எதுவுமே எழுதாமல் விடுவது நல்லது.

தமது கட்டுரையில் ஓர் இடத்தில் "சிங்களவர்களும் தமிழர்களும் நெருங்கிய நட்புறவுடன்" வாழ்வதாக மணியன் குறிப்பிடுகிறார். ஒரு சில மேல் தட்டு வர்க்கத்தினருடன் மேலோட்டமாக பேசிவிட்டு, அதையே ஆதாரமாக கொண்டு இலங்கையிலுள்ள தமிழ்—சிங்கள இனப்பிரச்சினையை அளந்திட மணியன் முற்படுவாரானால், அங்கேதான் அவர் பெரிய தவறு இழைத்திருக்கிறார்.

"சிங்களவர்களின் உள்ளங்களில் தமிழர்களுக்கு எதிரான துவேஷ உணர்வு மிக ஆழமாக அழிக்கமுடியாதபடி வேரோடியுள்ளது" என்று சர்வதேச மனித உரிமைச்சங்கம் இலங்கையின் இனப்பிரச்சினை பற்றி தீர ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பித்த பின்னும் மணியன் போன்ற எழுத்தாளர்கள் மேலோட்டமான போலித்தனங்களை நம்பி அதையே உண்மையென மயங்குவது பத்திரிகா தர்மமாக முடியாது!

தனது கருத்துக்களை எழுதுவதற்கு மணியனுக்குள்ள உரிமையை நாம் மறுக்கவில்லை; ஆனால் (Facts are Sacred, Comments are Free) உண்மைகள் புனிதமானவை, கருத்து சுதந்திரமானது என்பதை உணர்ந்து உண்மையின் அடிப்படையில் இலங்கை இனப்பிரச்சினைபற்றி திரு. மணியன் தமது கட்டுரைகளில் எழுதுவாராக!

மணியனின் 'இதயம்' ஈழத்தமிழர்கள் மத்தியில் மிகுந்த செல்வாக்கைப் பெற்று வருகிறது! ஈழத் தமிழர்களின் இதயங்களை திரு. மணியன் புண்ணாக்காமலிருக்க வேண்டுமென்பதற்காகவே இந்தக் குறிப்பு.

—கோவை



க. இராமலிங்கம்,
யாழ்ப்பாணம்.

கே: உகந்தை முருகன் பொத்துவில் கனகரத்தினத்தைக் காப்பாற்றிவிட்டார்-இல்லையா?

ப: "நல்ல குருநாதன் நம்மை வருத்துவது கொல்ல வல்ல கொல்லவல்ல; பொல்லாக்குணம் போக்க"!

கே: சோதிடம்பார்த்து இயங்கினால் தமிழ்ஈழம் கிடைக்குமா?

ப: அப்படியானால் சோதிடம் பார்த்து தேர்தலை வைத்த திருமதி இந்திரா காந்தியும், திருமதி சிறிமாவோவும் இந்தியாவிலும் இங்கும் மீண்டும் ஆட்சிக்கு வந்திருக்கவேண்டுமே!

ஃ

செல்வன் ம.கௌரிசங்கர்,
துன்னாலை.

கே: குடியரசுத்தலைவர் எதையும் செய்யலாம் என்றால் அமிர்தலிங்கத்தை அவர் ஒரு பெண் ஆக்கினாலும் ஆச்சரியமென்ன?

ப: அப்படி அமிரை ஒரு பெண் ஆக்கினாலும், அவரது வயிற்றுக்குள்ளிருந்து 'தமிழ் ஈழம்' என்ற நிறைமாதப் பிள்ளை பிறந்தேதீரும்! அதை ஜெயவர்த்தனாவால் தடுக்க முடியாது!

ஃ

றியோ அன்ரனிப்பிள்ளை,
கந்தசாமி கோவில் வீதி,
வவுனியா,

கே: பொத்துவில் கனகரத்தினத்தின் வருங்காலநிலை என்ன?

ப: எல்லாம் அந்த உகந்தை முருகனுக்குத்தான் தெரியும்!

ஃ

சுசிலா சவரிமுத்து,
குருசோ வீதி,
யாழ்ப்பாணம்.

கே: தந்தை செல்வாவின் சிலைநிதிக்கென்று பணம் சேகரித்து அதை மோசடி செய்யும் தமிழர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப: தந்தை செல்வாவின் இலட்சியங்களையும் கொள்கைகளையும் மோசடி செய்வோரைவிட இவர்கள் கொடுமையானவர்கள் அல்ல!

ஃ

தமிழ் நேசன்,
கொழும்பு, 11

கே: லண்டன் ஈழவிடுதலை இயக்கத்தின் முகவரி என்ன?

ப: 35, PRIOLORD, CHARLETON, LONDON SW 8.

ஃ

அ. வேந்தக் கோன்,
ஊர்காவற்துறை.

கே: [illegible] முகர்கள் கிழக்கு மாகாணத்துக்கு சென்று கூட்டங்கள் நடத்தி கொள்கை விளக்கம் தந்து கிளைகளை அமைத்து, அங்கு இயக்கத்தைப் பலப்படுத்தினால் என்ன?

ப: தந்தைசெல்வா எப்பொழுதும் கிழக்குமாகாண மக்களின் மீதே விசேட கவனமும் அன்பும் செலுத்தி வந்தார்; அதேபோல அமரர் வன்னியசிங்கமும் கிழக்குமாகாண மக்களுக்கு உதவிடவே எப்போதும் முன்னிற்பார். இந்தப் பாசப்பிணைப்பே இனஒற்றுமையை கட்டிவளர்த்து இயக்கத்துக்கு வலிவுதந்தது. இன்றைய தலைவர்களும், தந்தை செல்வா, அமரர் வன்னியசிங்கம் காட்டிய வழியில், கிழக்குமாகாணத்துக்கு அடிக்கடி சென்று, அங்குள்ள மக்களின் சுக துக்கங்களில் பங்கெடுத்து, இயக்கத்தை அங்கு மேலும் வளர்த்திடவேண்டும்; கருத்து வேற்றுமைகளைத் தீர்க்கவேண்டும்; முடியாவிட்டால் களைபிடுங்கவேண்டும்; பயிர் செழித்து வளர்ந்திட களைபிடுங்கலும் அவசியம்; ஆனால் களையென்று தவறாக நினைத்து பயிர்களை பிடுங்கி விடவும் கூடாது!

ஃ

எஸ். எம். நாகீப்,
கோவில் வீதி,
கந்தளாய்.

கே: இயக்கத்தை காட்டிக்கொடுக்கமுயலும் ஒரு சில தமிழ் முதலாளிகளைப் பற்றி உங்கள் கருத்தென்ன?

ப: "ஊசிமுனைக் காதுக்குள்ளே ஒட்டகம் புகுந்தாலும், பரமண்டலத்திலே பணக்காரன் நுழைய முடியாது" என்றார் யேசுபெருமான். அதேபோல ஒரு தூய்மையான விடுதலை இயக்கத்துக்குள்ளும் பணமுதலைகளை நுழையவிடுவது இலட்சியத்துக்கும் இயக்கத்துக்கும் ஆபத்து. நம்பூதிரிபாத் ஒரு பெரிய பணக்காரர்; ஆனால் அவர் தன் சொத்துக்கள் முழுவதையுமே கட்சிக்கு எழுதிகொடுத்துவிட்டு ஒட்டாண்டியாகத்தான் இந்திய கம்யூனிஸ்ட்கட்சியில் சேர்ந்தார்; பணக்காரர்கள். உண்மையான இலட்சியவாதிகளாக இருந்தால், நம்பூதிரிபாத்தையே பின்பற்ற வேண்டும்!

ஃ

க. கிருஷ்ணமூர்த்தி,
முதலாம் குறிச்சி,
தம்பிலுவில்.

கே: சிங்களவர்கள் நமது பங்கினைப் பிரித்துத்தர தயங்குகிறார்களே — என்ன செய்யலாம்?

ப: பங்கினை அவர்களாக சமாதானமாகத் தராவிட்டால் நாமாகப் பறித்து எடுக்கவேண்டியதுதான்!

ஃ

ந. வசந்தகுமாரன்,
அராலி கிழக்கு,
அராலி.

கே: வவுனியா மாவட்டத்தின் பழைய தமிழ் பெயர் என்ன? விளாங்குளம் என்றும் அழைக்கப்பட்டுள்ளதா?

ப: வன்னிமாநிலம்பனங்காமம், விளாங்குளம் என்றெல்லாம் அழைக்கப்பட்டதுண்டு! தமிழ்ஈழத்தின் ஆட்சி, தமிழனுடையகரங்களுக்குவரும்போது, பழைய தமிழ்பெயர்களை தமிழ்ஊர்களுக்குசூட்டுவோம்!

ஃ

எம். கிறிஸ்ரி பெர்னாண்டோ,
பேசாலை.

கே: "அடிமையாக வாழ்வதைவிட முழங்காலில் நின்று சாவதே மேல்" என வாழும் அண்ணன் காசியின் தற்போதைய நிலையென்ன?

ப: அதே உணர்வுடன், அதே இலட்சிய வெறியுடன் இயங்கிவருகிறார்; தமிழ் ஈழத்தின் அந்த புரட்சிக் கவியை ஆதரித்து, அவரை வாழவைப்பது தமிழ் சமுதாயத்தின் பொறுப்பு ஆகும்!

கே: அகிம்சை முறையில் தமிழ் ஈழம் பெறமுடியாது; ஆயுதம்தாங்கி போராடித்தான் பெறமுடியும் என்பது என் கருத்து: உங்கள் கருத்து என்ன?

ப: அபிப்பிராய சுதந்திரம் ஒவ்வொருவருக்குமே உண்டு!

★ கேள்விகள் அனுப்ப வேண்டிய முகவரி:-

திருவாளர் குயுக்தியார்
238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.


**ஆங்கிலக் கல்வி**



அதிவிரைவில் தபால் மூலமும், நேரிலும் எழுத, வாசிக்க, பேசப்படிக்க விபரங்களுக்கு எழுதுங்கள்: "ஆங்கிலக் கல்வி", போதனாசிரியர்: ஜோர்ஜ் சேகர், பொரளை, கொழும்பு.



**திருக்கேதீஸ்வரத்தில் சகாய விற்பனை**

மகாசிவராத்திரி அன்று மில்க்வைற் தயாரிப்புக்கள் யாவும் கோவில் வீதியில் எமது விளம்பர விற்பனை வாகனத்தில் சகாய விற்பனை நடைபெறும். மேலுறைகள் சேகரித்து வைத்திருப்போர் எமது விளம்பர வாகனத்தில் கொடுத்து சிறந்த பரிசில்களை பெற்றுக்கொள்ளுங்கள்.

மில்க்வைற் - யாழ்ப்பாணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "இலங்கை என்றும் ஒரே நாடாக இருந்ததில்லை! தமிழ், சிங்கள அரசுகளே அங்கு இருந்தன"

## கனடா நாட்டுப் பத்திரிகை எழுதுகிறது

கனடாவிலுள்ள 'எட்மொன்ரொன்' (EDMONTON) நகரிலிருந்து வெளிவரும் (Saint Johns Edmonton Report) 'எட்மொன்ரொன் றிப்போர்ட்' என்ற ஆங்கில வார சஞ்சிகையில் சில மாதங்களுக்கு முன்னர் இலங்கைத் தமிழர் நிலை குறித்து வெளியிடப்பட்டிருந்த கட்டுரையின் தமிழாக்கம் இது! —Ceylon Relief — Edmonton Tamils Organize To Help War Torn Homeland என்ற தலைப்புடன் வெளியிடப்பட்டிருந்த இக்கட்டுரையுடன் சிங்களத் தேர்ச்சியின்மை காரணமாக தமிழர் ஒருவருக்கு சிங்கள அரசாங்கத்தினுல் வழங்கப்பட்ட வேலை நீக்க அறிவித்தல் கடிதத்தின் போட்டோஸ்ராட் படமும் இடம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. அந்தபோட்ரோஸ்ராட் படத்துக்கு மேற்படி சஞ்சிகை தந்துள்ள படவிளக்கம் வருமாறு:— Sri Lanka Government Dismissal Certificate—The Choice; Adopt The Sinhalese Language or be fired முனபு 'சிலோன்' என்று அழைக்கப்பட்ட சிறீலங்காவில் கடந்த ஆவணி முற்பகுதியில் வன்முறை தலைதூக்கிய நாளிலிருந்து கிடைக்கின்ற செய்திகள் கொஞ்சமும் உற்சாகமூட்டுவதாக அமையவில்லை. சிங்கள—தமிழ் சமுதாயங்களுக்கிடையே ஏற்பட்ட இந்தச் சண்டையின்போது குறைந்தது நூறுபேராவது இறந்திருப்பார்கள்; ஐயாயிரம் பேர் கைது செய்யப்பட்டுள்ளார்கள். இன்னும் 7,000 தமிழர்கள் அகதிமுகாம்களிலிருந்து தமிழ் பிரதேசங்களுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

எனவேதான் தனது முந்திய தாயகத்திலிருந்து அண்மையில் வந்திருந்த கடிதத்தை 'எட்மொன்ரொனி'யனுன ரவி நடராஜா மிகவும் பரபரப்புடன் உடைத்தார். அவருடைய குடும்பத்தைச் சேர்ந்த எவரும் இக்கலவரத்தின்போது பாதிக்கப்படாததையறிந்து அவர் சற்றுத் தேறுதல் அடைந்தாலும், அக்கடிதத்தில் இடம்பெற்றிருந்தகதை அச்சம்தருவதாக இருந்தது.

தலைநகராகிய கொழும்பிலிருந்து வடபகுதியிலுள்ள தமிழ் பிரதேசத்துக்கு சென்ற புகையிரதத்தில் பயணம் செய்த பிரயாணிகளில் அவரது (ரவி நடராஜாவினுடைய) தாயாரும் ஒருவராவர். அந்தப் புகையிரதத்தில் சத்தமிட்டுக்கொண்டு ஏறிய ஆயுதம் தாங்கிய சிங்களவர்கள், தனிமைப்படுத்தப்பட்ட காட்டுப்பகுதியில் பிரயாணிகளை வெளியே பலவந்தமாக இழுத்து எடுத்தார்கள். பலமணி நேரம் தடுத்து வைத்தார்கள். சில பிரயாணிகள் தாக்கப்பட்டார்கள். திரு. நடராஜாவினுடைய தாயார் தாக்கப்படவில்லையாயினும், சில மணித்தியாலங்களுக்கு துப்பாக்கி முனையில் வைக்கப்பட்டிருந்தார். அவர் ஆங்கிலம் பேசியதாலும் அவருடன் கூட மெல்லிய தோல்படைத்த வெளிநாட்டுப்பிரயாணி ஒருவர் பயணம் செய்ததாலும் அவர் துன்புறுத்தப்படவில்லை. அவர் தெரிவித்திருந்த அச்சம்பவம் ஒன்றும் புதுமையானதல்ல — உண்மையில் சிங்களவர் புகையிரதத்துக்குள் புகுந்து செய்த கலாட்டாபற்றி பத்திரிகைகள் செய்தி கூட வெளியிடவில்லை.

'எட்மண்டனி'ல் வாழும் பதினைந்து தமிழ்குடும்பங்கள், கடிதங்கள் மூலம் இந்த மாதிரிக்கதைகளை தங்கள் தாய்நாட்டிலிருந்து கேள்விப்படும்போது, என்னசெய்வதென்றறியாது திகைத்துப் போய்விடுகிருர்கள்! ஆயினும் அவர்கள் தங்கள் தாயகத்தில் கஷ்டப்படும் மக்களுக்கு உதவிபுரிய நிதி சேகரிக்கும் நோக்குடன் அண்மையில் ஓர் அமைப்பை ஏற்படுத்தியிருக்கிருர்கள்,

இலங்கைத்தீவில் வாழும் பெரும்பான்மைச் சிங்களவர்களுக்கும் சிறுபான்மைத் தமிழர்களுக்குமிடையே ஏற்பட்டிருக்கும் மோதல் பல நூற்ருண்டுகளாக இருந்து வந்துள்ளது. இலங்கை மரபுவழியாக, இரண்டு போட்டி இராச்சியங்களைக் கொண்டு இரண்டு வேறுபட்டமொழிகளுடன் இருந்துவந்திருக்கிறது: பெரும்பான்மைத் தமிழ் அரசு வடக்கிலும், சிங்களவர் அரசு தெற்கிலுமாக இருந்து வந்துள்ளது. 1815ம் ஆண்டு பிரிட்டிஷ்காரர் ஒரே நிர்வாகத்தின் கீழ் தீவின் அனைத்துப் பிரதேசங்களையும் கொண்டுவரும் மட்டும்இலங்கைஒருநாடாக இருந்ததில்லை.

133ஆண்டுகாலம் நடைபெற்ற பிரிட்டிஷ் காலனி ஆட்சியின் கீழ் இந்த இரு இனங்களும் அமைதியாக இருந்தனர். ஆனல் 1948ம் ஆண்டு சுதந்திரம் கிடைத்தவுடன் மீண்டும் பழைய பகைமை வெளிப்படத் தொடங்கியது. தங்கள் பெரும்பான்மை பலத்தைக் கொண்டு சிங்களவர் அரசியல் அதிகாரத்தைச் சுலபமாக பெற்றுக்கொண்டனர்.

1956ம் ஆண்டு இலங்கையின் உத்தியோகமொழியாக சிங்களம் புகுத்தப்பட்டது. இதன்காரணமாக தமிழ்மட்டும், அல்லது தமிழும் ஆங்கிலமும் பேசத்தெரிந்த அரசாங்க அதிகாரிகள் வேலை இழக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. சிங்கள மொழித் திணிப்பை எதிர்த்து அஹிம்சை ரீதியிலான எதிர்ப்புக்கள் தோன்றி, 1960வரை உள்நாட்டுக் குழப்பம் நிலவியது.

உத்தியோகம், தொழில் வாய்ப்பு, ஆயுதப்படைகள், உயர்கல்வி போன்ற பல்வேறு துறைகளிலும் பாரபட்சங்கள் தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டு வந்த போதிலும், 1960 முதல் கடந்த கோடைகாலம்வரை அங்கு ஓரளவு அமைதிநிலவியது.

இப்போது எட்மன்ரொனில் ஒரு பத்திரிகையாளராகப்பணி புரியும் தமிழரான சாம் லோறன்ஸ், இத்தகைய பாரபட்சத்தால் பாதிக்கப்பட்டவர்களில் ஒருவர். அரசாங்க தந்திக்கந்தோர் உத்தியோகத்தராகப் பணியாற்றிவந்த அவர், நல்லவேலைத் திறனுக்குரிய சான்றிதழ் பெற்றிருந்தும்கூட சிங்களத் தேர்ச்சியின்மை காரணமாக 1972ம் ஆண்டு வேலையிலிருந்து தூக்கியெறிப்பட்டார். அவர் தமது வேலையிழந்தது பற்றி எதுவித வெறுப்புக் காட்டாதபோதிலும், அங்கு (இலங்கையில்) நடந்த அண்மைக்கால கலவரம்பற்றி மிகவும் ஆர்வமுடன் காணப்பட்டார்.

இலங்கையிலுள்ள சூழ்நிலை கொந்தளிப்படைந்துள்ளது. தமிழர்கள் சிங்கள நாட்டிலிருந்து தமிழ் பிரதேசங்களுக்கு வந்துகொண்டிருக்கிருர்கள். தங்கள் சொந்த ஆட்சியை மீள அமைக்க வேண்டுமென்ற வேகம் தமிழர் மத்தியில் தோன்றியுள்ளது.

அதே சமயத்தில் எட்மன்ரனிலுள்ள தமிழ் சமுதாய உறுப்பினர்கள் ஒவ்வொரு மாதமும் ஒருநாள் சம்பளத்தையும், அதுதவிர மாதாமாதம் ஐந்து டொலர்களையும் தங்கள் தாயகத்துமக்களின் நல்வாழ்வுக்கென சேமித்துவைத்துவருகின்றனர். அவர்கள் இலங்கையிலிருந்து தொலைபேசி அழைப்புக்களையும், கடிதங்களையும் எதிர்பார்த்து கவலையில் மூழ்கியுள்ளனர்."

இவ்வாறு கூறப்பட்டுள்ள அக்கட்டுரையில் பின்வரும் அடிக் குறிப்பும் காணப்படுகிறது.

"எட்மொன்ரொன், கல்காரி போன்ற கனடாவின் மேற்குப்புற நகரங்களில் வாழும் இலங்கையர்கள் பெரும்பாலும் தமிழர்களே; சிங்களவர்கள் அல்லர். இலங்கை அரசாங்கம் கடைப்பிடிக்கும் பாரபட்சங்கள் தாம் வேறுநல்ல வாய்புக்கள் தேடுவதற்காக தமிழரை தங்கள் (பழைய) தாயகத்திலிருந்து வெளியேற்றுகின்றன.

---

# தமிழினமே விழிப்பாய் இரு! மாற்றானின் மனம் இன்னும் மாறவில்லை!!

தரப்படுத்தலால் தரமான நிலைக்கு தம்மை உயர்த்திக் கொண்ட சிங்கள மாணவர்கள் தமிழின மாணவ மணிகள் தரமான புள்ளி பெற்றும் கண்ணீரும் கம்பலையுமாய் கனல் கக்கி நின்றதை அறிந்து நிலைமை உணர்ந்து தமிழ் மாணவ உள்ளங்களின் கொந்தளிப்பைக் கொடூர உணர்வை புரிந்து கொண்ட அரசு தரப்படுத்தலைத் தளர்த்தியதாக வாயளவில் கூறியது. இதன் விளைவு சிங்கார வாழ்வு அமைத்துக்கொண்ட சிங்கள மாணவர்கள் சீறி எழுகிருர்கள். சினம் கொள்கிருர்கள்.

அரசுக்கு அதன் விளைவு புரிந்தது. முடிவு பாடசாலைகள் மூடப்பட்டன. தரப்படுத்தலை மீண்டும் அமுலாக்கக் கோரி அந்தச் சிங்கள மாணவர்கள் தமிழினத்தை அழிக்க ஏவி விடப்பட்டார்கள்—ஏவி விடப்பட்டுக் கொண்டிருக்கிருர்கள். ஆனல் அரசு ஏவலாளர்களின் திட்டங்களை முளையிலேயே கிள்ளி எறிந்தது. ஆனல் அதே அரசு என்ன கூறியது தெரியுமா? தமிழினமே!

"பாடசாலைகளை மூடியிராவிடில் மீண்டும் ஒரு இனக் கலவரம் தலை தூக்கி இருக்கும்."

இதன் அர்த்தம் என்ன? தமிழினமே! நீ இன்[illegible]றும் இந்த நாட்டின் பணயக்கைதி, சிங்கள இனத்துக்கு ஒரு ஊறு நேர்ந்தால் உன் உயிர் சூறையாடப்படும் என்பதே அர்த்தம் இதைப்புரிந்து கொள் தமிழினமே!

உயர் பள்ளி பெற்ற தமிழினம் புரண்டழுதது. வெம் கொடுமைச் சாக்காட்டில் வெந்தது. ஆறுதல் கூறி அமைப்போம் தமிழீழம் என்றனர் தமிழ்த்தலைவர்கள். தேறுதல் பெற்ற மாணவர்கள் மீண்டும் உயர்பள்ளிகள் பெற்று பல்கலைக்கழகங்களைப் பூர்வீகச் சொத்தாக்கி தமிழ் இளம் உள்ளங்கள் [illegible] இனம் புரிந்து கொண்டது.

—8-ம் பக்கம் பார்க்க

வெளிவந்துவிட்டது

சன்சோனி ஆணைக்குழுவிற்குத் தமிழ் அகதிகள் மறுவாழ்வுக் கழகம் அனுப்பிய அறிக்கை—

ஆகஸ்ட் 1977 இலங்கை முழுவதிலும் நடந்த நிகழ்வுகளின் தொகுப்பு—

சச்சிதானந்தனின் சரளமான நடையில் தமிழாக்கம்—

ஆவணி அமளி

விலை 3,00 வி. பி. பி. உண்டு.

ஸ்ரீகாந்தா அச்சகம் - புத்தகசாலை
213, காங்கேயன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணம்

## தமிழா மயங்காதே!

இந்நாட்டுத் தமிழ்த் தேசிய இனத்தைப் பீடித்துள்ள அடிமைத்தனம் என்னும் அரசியல் நோயின் பல்வேறு வெளிப்பாடுகளில் ஒன்று தான் உயர்கல்வித்துறையில் தமிழனின் வாய்ப்பை வெட்டி வீழ்த்துவதற்காக முந்திய சிங்கள ஏகாதிபத்திய ஆட்சி பின்பற்றிய இனவாரி—மொழிவாரித்தரப்படுத்தல் முறையாகும்.

தகுதியும் திறமையும் மிகுந்த தமிழ் மாணவர்களை ஒதுக்கித்தள்ளிவிட்டு, திறமையும் தகுதியும் குறைந்த சிங்கள மாணவர்களை பல்கலைக்கழகங்களுக்குள் நுழைப்பதற்கு சிங்கள அரசாங்கத்தால் கையாளப்பட்டு வந்த "தரப்படுத்தல்" எனும் இந்தக் கொடிய இனவெறிக் கொள்கை பற்றி தமிழர் விடுதலைக்கூட்டணி வெளிநாடுகள் எங்கும் பிரசாரம் செய்து சிங்கள ஏகாதிபத்திய வாதிகளின் முகமூடியை கிழித்தெறிந்தது; இதனுல் நாகரிக நாடுகள் இலங்கையை ஓர் இன வெறிக்குகையாக கருதத்தொடங்கியதுடன் அருவருப்பான பார்வையை இலங்கை மீது வீசத்தொடங்கின.

தரப்படுத்தல் எனும் தகாத முறையால் வெளிநாடுகளில் இலங்கைக்கு ஏற்பட்டிருந்த அவப்பெயரை உணர்ந்த ஐக்கிய தேசியக்கட்சி, தான் ஆட்சிக்கு வரும்பட்சத்தில் தரப்படுத்தல் முறையை அகற்றப்போவதாக தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் பிரகடனப்படுத்தியது.

அப்படியே ஆட்சிக்குவந்த பின்னர், இப்போது தரப்படுத்தல் முறையை நீக்கியுள்ளதாக அறிவித்திருக்கிறது. இந்த அறிவிப்பு வெறும் வாயளவில் தான் வந்திருக்கிறதே தவிர—தரப்படுத்தல் நீக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்ட பின்னர், இன்னும் பல்கலைக்கழக பிரவேசம் பற்றிய முடிவுகள் வந்தபாடில்லை; தரப்படுத்தல் நீக்கத்தினுல், உண்மையில் நடைமுறையில் தமிழர்களுக்கு இழைக்கப்பட்டு வந்த அநீதி துடைக்கப்பட்டு விட்டதா என்று தெரியவில்லை!

ஆனுல் அதற்குள் தரப்படுத்தல் நீக்கத்திற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்தும், தரப்படுத்தல் நீடிக்க வேண்டுமென்று கோரியும் சிங்கள நாடு சென்ற வாரம் பொங்கியெழுந்தது. சிங்கள மாணவர் அமைப்புக்கள், இளைஞர் இயக்கங்கள், அகில இலங்கை பௌத்த காங்கிரஸ், பௌத்தபிக்குகள் உட்பட தீவிர சிங்கள பௌத்த வெறியர்கள் ஒன்றுபட்டு தரப்படுத்தல் கைவிடப்படுவதை எதிர்த்து சிறீலங்கா சுதந்திரக்கட்சியின் ஆசீர்வாதத்துடன் நேரடி போராட்டங்களை நடத்தத் திட்டமிட்டிருந்தன.

ஆயினும், தரப்படுத்தல் நீக்கத்துக்கு எதிர்ப்பு என்ற போர்வையுடன் தனக்கு எதிராகவே இந்த இயக்கம் தொடங்கப்படுவதை உணர்ந்த ஐ. தே. க. அரசாங்கம், புத்திசாலித்தனமாக இவற்றை முன்கூட்டியே தடைசெய்ததுடன், சிலரை கைது செய்து விளக்கமறியலிலும் வைத்துள்ளது. இவை நடைபெற அனுமதிக்கப்பட்டிருந்தால் மற்றோர் இனக்கலவரமாக அது உருவெடுத்திருக்கும் என்ற அரசாங்கத்தின் குறிப்பு சிந்திக்கக்கூடியது!

தெற்கில் இனக்கலவரம் எழ முடியாத சூழ்நிலையோ ஐக்கியமோ ஏற்படவில்லையென்பதையும் எந்தச் சமயத்திலும் தமிழர்கள் மீது தாக்குதலும் இனக்கலவரமும் ஏற்படக்கூடிய சூழ்நிலையே சிங்கள நாட்டில் நிரந்தரமாக இருந்துவருவதையும், நாம் கவனிக்க வேண்டும்.

தரப்படுத்தல் நீக்கப்படுவதை எதிர்த்து சிங்களவர் மத்தியில் எழவிருந்த கிளர்ச்சி அரசாங்கத்தின் கடும் நடவடிக்கை காரணமாக தற்காலிகமாக கட்டுப்படுத்தப்பட்டுள்ளது, ஆயினும் இதனுல் தமிழர்களுக்கு நிரந்தரமான பயன் உண்டா—தமிழர் பிரச்சினைகள் தீர வாய்ப்புண்டா என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும்.

அநீதி என்று உணரப்பட்ட ஒன்றையே துடைக்க விடாமல் கிளர்ச்சியிலிறங்கத்துடிக்கும் தீவிர சிங்களவர்கள், தமிழ் மக்களுக்கு ஏனைய உரிமைகள் வழங்குவதையா அனுமதிக்கப் போகிறுர்கள்?

சரி, அப்படியில்லை யென்று, ஜே. ஆர். அரசாங்கம் பிடிவாதமாக கடைசிவரை உறுதிதளராமல் இருந்து தரப்படுத்தலையும் நீக்கி வேறு சில சலுகைகளையும் தமிழ்மக்களுக்கு வழங்கிவிடுவதாகவே வைத்துக்கொள்வோம்! ஜே ஆர். அவர்களோ, ஐக்கியதேசியக்கட்சியோ ஆட்சியில் நிரந்தரமாக சாசுவதமாக இருக்கப்போகிறவர்கள் இல்லையே!

அடுத்த பொதுத்தேர்தலில் மீண்டும் சிறீலங்கா சுதந்திரக் கட்சி சிங்களத் தீவிரவாதிகளின் ஆதரவுடன் ஆட்சிபீடமேறுமானுல், பழையபடி தரப்படுத்தலும், தமிழர் கழுத்தறுப்புக்களும் ஆரம்பமாகிவிடும்!

**எனவே சிங்கள அரசாங்கம் தருகின்ற எந்தச் சலுகையும் நிரந்தரமானதுமல்ல; அதிலே தமிழர்கள் போலித்தனமான நம்பிக்கைகொள்வதும் மடைத்தனம்!**

நோயின் வெளிப்பாடுகளுக்கு— அறிகுறிகளுக்கு— சிகிச்சை செய்வதால் பயனில்லை; ஓர் இடத்திலே சிகிச்சை செய்ய மற்றோர் புறத்திலே மற்றோர் அறிகுறி தோன்றிக்கொண்டேயிருக்கும்.

எனவே தமிழ் தேசிய இனத்தை பீடித்திருக்கும் அடிமைத்தனம் எனும் நோய்க்கு ஒரே மாமருந்து அறுவை சிகிச்சையே—அதாவது இழந்த சுதந்திரத்தமிழ் ஈழத்தை மீளவும் நிறுவுவதே!

இந்த உண்மையை உணர்ந்து—வெறும் மேலோட்டமான காரியங்களில் மயங்காது — தமிழ்தேசிய இனத்தின் விடுதலையை வென்றெடுக்க தமிழ் மக்கள் உறுதி பூணுவார்களாக.

# கொழும்பு வளாகம் சிங்கள இனவெறிக்குகையா?

## பிக்கு தலைமையில் தரப்படுத்தல் ஆதரவு இயக்கம்!

இலங்கைப் பல்கலைக் கழகத்தின் பல்வேறு பீடங்களுக்கும் மாணவர்களைத் தெரிவு செய்வதற்கு முந்திய அரசாங்கத்தால் புகுத்தப்பட்ட இனவாரித் தரப்படுத்தல் முறையை நீக்கப்போவதாக தற்போதைய அரசாங்கம் அறிவித்ததைத்தொடர்ந்து சிங்கள இளைஞர் இயக்கங்களும் மாணவர் அமைப்புகளும் தரப்படுத்தலை நீடிக்கக் கோரி ஆர்ப்பாட்டங்களை நடத்தியதோடு பல தீர்மானங்களையும் நிறைவேற்றின. இந்த வீடெரிப்பு செயலுக்கு கொள்ளி எடுத்துக் கொடுத்தவர் "மடிகே பஞ்ஞாசிக தேரோ" என்றே கருதப்படுகிறது. இவர் பம்பலப்பிட்டியைச் சேர்ந்தவராகையால் இவர் அருகிலுள்ள கொழும்பு வளாகத்தினுள் ஊடுருவி அங்குள்ள சிங்களப் பட்டதாரி மாணவர்கள் மத்தியில் தமது நச்சுக்கருத்தை திணித்து கொழும்பு வளாகத்தினுள் இவ்வாறுன ஓர் இயக்கம் துளிர்விட அடிகோலினுர் எனக் கருதப்படுகிறது.

இந்த இயக்கத்தை தீவிரப் படுத்தவேண்டும் என்ற நோக்குடன் மூன்று தினங்களாக பொரல்லையிலுள்ள மாணவர் விடுதியொன்றில் இரவும் பகலும் சிங்களப் பட்டதாரி மாணவர்கள் பலரும் கூடி பெரும் விவாதத்தை நடத்தி பல திட்டங்களைத் தீட்டினுர்கள். விவாதம் என்று கூறும்போது அங்கு தரப்படுத்தல் முறை கைவிடப்படுவதை ஆதரித்து எவருமே பேசவில்லை என்றும் ஆனுல் தரப்படுத்தலை நீடிக்கக் கோரி எத்தகைய போராட்டங்களை நடத்தலாம் என்பதை ஆராயும் ஒரு தலைப்பட்சமான விடயமே அவர்களது விவாதத்தின் தாற்பரியமாகவும் காணப்பட்டது. அத்துடன் தரப்படுத்தல் முறைகைவிடப்படுவதால் மருத்துவ பீடத்திற்கு தமிழ்மாணவர்கள் பெருந்தொகையாக அனுமதி பெறப்போகிறுர்கள் என்றும் அதை எப்படியாவது கட்டுப்படுத்தியாக வேண்டும் என்றும் அதற்காக எத்தகைய நடவடிக்கைகளை எடுக்கலாம் என்பதை ஆராய்தலுமே அவர்களது உள்நோக்கமாகவிருந்தது.

### வளாகம் சுற்றியார்

கொழும்பு வளாக கலைப்பீட சிங்கள மாணவர்கள் 70 விகிதம் புள்ளிகளின் அடிப்படையிலும், 30 விகிதம் மாவட்ட அடிப்படையிலும் பல்கலைக்கழக தெரிவு நடைபெற வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து 23-2-78 வியாழக்கிழமை ஓர் பகிஷ்கரிப்பு நடாத்தினர். கலைப்பீடத்திற்குள் ஊடுருவல் செய்து சிங்கள மாணவர்கள் மத்தியில் இனவெறியைக் கக்கியவர்கள் பலரும் பௌத்த காங்கிரசைச் சேர்ந்தவர்களாகவே இருந்ததாகக் கருதப்படுகிறது. இங்கு ஊடுருவிய ஒவ்வொரு பௌத்த துறவியினதும் நோக்கம், 'தரப்படுத்தல் நீக்கம்' பற்றிய தமது அபிப்பிராயத்தை வெளியிடுவதாகவன்றி சிறுபான்மை சமூகத்தை நையாண்டி செய்வதாகவும் இனவாதத்தைக் கிளறி விடுவதுமாகவே காணப்பட்டது.

கொழுப்பு வளாகத்தின் விஞ்ஞான பீடத்தின் கதவுகள் யாவும் என்றோ தமிழ் மாணவர்களுக்குமூடப்பட்டு விட்டபடியால் இப்போது அங்கு முழுக்க முழுக்க சிங்கள மாணவர்களே கல்வி பயில்வதால் அங்கு தரப்படுத்தலை நீடிக்கவேண்டும் என்ற பேச்சே அடிபடலாயிற்று. அவர்கள் தரப்படுத்தலை ஆதரித்து தீர்மானங்களை நிறைவேற்றியதோடு தமது தீர்மானங்களை சுலோக அட்டைகளில் தீட்டி வளாக மரங்களிலே தொங்க விட்டிருந்த காட்சியைத் தான் அங்கு காணமுடிந்தது. சில இடங்களில் ஆரியர்—திராவிடர் பற்றிய பேச்சும், ஆரியர் திராவிடரிலும் அறிவில் குறைந்தவரல்லர் என்ற பேச்சும், ஆரியர்களே முழு ஆசியாவுக்கும் நாகரிகத்தை போதித்தவர்கள் என்ற பேச்சுத்தொனியும், திராவிடர் வழிவந்த தமிழர்களுக்கு விடைத்தாள்களை திருத்துவோர் கூடிய புள்ளிகளை வழங்குவதாலேயே அவர்கள் பல்கலைக்கழகத்திற்குள் நுழைகின்றனர் என்றும் இதனுல் அறிவிலும் நாகரீகத்திலும் மேம்பட்ட ஆரியர் வழிவந்த சிங்களவர்கள் அறிவிலிகளாக உலகின் முன் காட்டப்படுகின்றனர் என்ற பேச்சும் வளாகசுற்றியாரின் காதில் விழுந்தது மோதிச் சென்றன.

# 'போயா' தினத்தை கௌரவிப்பதுபோன்று சிவராத்திரியையும் கௌரவியுங்கள்!

## அரசநீதி அமைச்சரிடம் 'சைவநீதிமிஷன்' வேண்டுகோள்

'பௌத்த மக்களின் நலன் கருதி வருடத்தில் 12 போயா தினங்களை புனித தினமாகவும், பொது வர்த்தக வங்கி விடுமுறை தினமாகவும் பிரகடனப் படுத்தியுள்ளதை நாம் வரவேற்கிறேம். அதன் மூலம் அரசாங்கம் பௌத்த மதவளர்ச்சிக்கு ஆற்றிவரும் தொண்டினை நாம் மனதார பாராட்டுகிறேம். அதே வேளையில் இந்து மக்களின் நலன் கருதி சிவராத்திரி தினத்தைப் புனித தினமாகவும், அதன் மறுநாளை பொது வர்த்தக வங்கி விடுமுறை தினமாகவும் பிரகடனம் செய்ய இந்த அரசாங்கத்தின் மூலம் நடவடிக்கை எடுக்குமாறு தங்களை வேண்டிக் கொள்கிறேம்."

இவ்வாறு மத்தியக்கொழும்பு 'சைவநீதி மிஷன்' அரசாங்கத்தை வேண்டியுள்ளது. இது தொடர்பாக சைவநீதி மிஷன் அமைப்பாளர் திரு. சிவா. இராஜஜோதி அரச நீதி அமைச்சர் திரு. கே. டப்பிளியூ. தேவநாயகத்துக்கு மகஜர் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

அகில இலங்கையிலுமுள்ள இந்து இளைஞர் மன்றங்களும் சைவ உயர் பீடங்களும் கடந்த அரசாங்கத்[illegible] இக்கோரிக்கை [illegible]தாக நிராகரிக்கப்பட்டமையினை சுட்டிக்காட்டி, தார்மீகம் பேசும் யூ. என். பி. அரசு தானும் இதனை நிறைவேற்றுமா? என்றவாறுக கேள்வி எழுப்பும் தோரணையில் அனுப்பப்பட்டுள்ள அந்த மகஜரில், சிவராத்திரி கோரிக்கையினை நிறைவேற்றுமுகமாக பின்வரும் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.



சிவா. இராஜஜோதி

* சிவராத்திரி தினத்தன்று நாடு பூராவிலும் புலால், மது விற்பனைக்குத் தடைவிதிக்கவேண்டும்.

* சிவராத்திரி தினத்தன்று மாலை 6மணிக்குப் பின்னரே இந்து ஆலயங்கள் தோறும் விசேட பூஜை நிகழ்ச்சிகள் ஆரம்பமாவதால், அன்றைய தினம் மாலை 6மணியிலிருந்து மறுநாள் காலை 6மணிவரையிலும் திரைப்படங்கள் காண்பிக்க தடை விதிப்பதோடு, களியாட்ட விழாக்கள் நடத்துவதையும் தடைசெய்ய வேண்டும்.

* சிவராத்திரி தினத்தன்று கல்லூரி மாணவர்கள் ஆசிரியர்கள் உட்பட பல்வேறு அரச, தனியார் துறை ஊழியர்களும் இரவு முழுவதும் சமய அனுட்டானங்களில் கலந்து கொள்வதே வழக்கமாதலால், சிவராத்திரியின் மறுநாளை பொது, வர்த்தக வங்கி விடுமுறை தினமாகப் பிரகடனப்படுத்தவேண்டும்.

* சுருங்கக்கூறின் சிவராத்திரி தினத்தை ஒரு புனித தினமாகவும், சிவராத்திரியின் மறுநாளை மாத்திரம் பொது வர்த்தக வங்கி விடுமுறை தினமாகவும் பிரகடனம் செய்தல் மிகுந்த பயன் தருவதாகும்.

மேற்கண்டவாறு அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மகஜரின் பிரதிகள் எதிர்க்கட்சித் தலைவர், இ. தொ. கா. தலைவர், தமிழ்க் காங்கிரஸ் வாலிபர் முன்னணி, அகில இலங்கை இந்துமாமன்றம் ஆகியவற்றுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "வீர வியட்னாமின் பெருந் தலைவரே வருக!"



## வியட்னாமிய பிரதமருக்கு தமிழீழ முதல்வர் வரவேற்பு!

வியட்னாமிய சோசலிஸ்ட் குடியரசின் பிரதமரும் மூத்த அரசியல் தலைவருமான திரு. பன் வொங்டொங் உத்தியோகபூர்வமான விஜயத்தை மேற்கொண்டு இலங்கைக்கு வந்திருக்கிறார். உலகின் மிக நவீனமான இராணுவ அடக்குமுறைகளை எதிர்த்து சுயநலமற்ற முறையில் போராடி வரலாற்று புகழ்பூத்த வெற்றியை யீட்டிய வியட்னாமிய மக்களின் கௌரவ மிக்க பெருந்தலைவரை வரவேற்பதில் நாம் பெருமையும் புளகாங்கிதமும் அடைகிறோம்.

மாபெரும் தேசபக்தரும், புரட்சிவாதியுமான ஹோசிமின் அவர்கள் காட்டிய சர்வதேச பொதுவுடமைப் பாதையில் வியட்நாமின் வீரமக்கள் சென்றுகொண்டிருக்கிறார்கள்.

"மனித சரித்திரத்தில், கால் நூற்றாண்டுகாலமாக தொடர்ந்து போராட்டத்திலீடுபட வேண்டியிருந்த வியட்னாமிய சோசலிசக் குடியரசு மக்களுக்கு அழிந்து போன தங்கள் பொருளாதார வளங்களை மீளவும் கட்டியெழுப்புவதற்கு போதிய அமைதியான காலம் இதுவரை கிடைக்காமற் போனது ஓர் துர்அதிர்ஷ்டமே.

அண்மையில் வியட்னாமிய எல்லைகளில் ஏற்பட்ட மோதலின் விளைவாக ஏற்பட்ட துன்பங்களும் இரத்தம் சிந்திய நிகழ்ச்சிகளும், முன்னேற்றப் பாதையில் செல்லும் வியட்னாமிய மக்களுக்கு விடப்பட்ட ஒரு பயமுறுத்தலாகும். அண்மையில் விடுதலைபெற்று சோசலிசப் பாதையில் செல்லும் கம்போடியா இந்தப் பிரச்சினையில் சம்பந்தப்பட்டுள்ளது கவலைதருவதாக உள்ளது. தென்கிழக்கு ஆசியாவிலும் உலகமடங்கிலும் வாழும் சுதந்திரத்தையும் சோசலிசத்தையும் நேசிக்கும் சமாதான விரும்பிகள் அனைவரும் கம்போடியாவுக்கும் வியட்னாமுக்கும் மிடையே மூண்டிருக்கும் எல்லைப் பிரச்சினை சுமுகமாக விரைவில் தீரவேண்டுமென்றே விரும்புகிறார்கள்.

உலகநாடுகளில் பல்வேறு சூழ்நிலைகளில் வெவ்வேறு வடிவங்களில் நிலவும் அடக்குமுறைகளையும், அடிமைத்தனத்தையும் எதிர்த்துப் போராடிவரும் சகல இயக்கங்களுக்கும் வியட்னாமிய மக்கள் நடத்திய வரலாற்றுப்புகழ்மிக்க வீர சுதந்திரப் புரட்சி உற்சாகமும் ஊக்கமும் அளிப்பதாக உள்ளது.

சுதந்திரத்தையும் சோசலிசத்தையும் நோக்கி வீர வியட்னாமியமக்கள் மேற்கொண்டிருக்கும்பயணத்தை உலகம் முழுவதும் ஆதரவுடனும் ஆச்சரியத்துடனும் அவதானித்து வருகிறது. வியட்னாமிய மக்கள் போராடிய அதே இலட்சியத்துக்காக போராடிவரும் ஏனைய மக்களுக்கு வியட்னாம் இன்று ஒரு நண்பனாக இருக்கிறது. நாங்கள் வியட்னாமிய மக்களின் நண்பர்களாகவே என்றும் இருப்போம்!"

—இவ்வாறு இந்த வாரம் இலங்கைவரும் வியட்னாமிய பிரதமரின் வருகையையொட்டி தமிழர் விடுதலைக் கூட்டணி செயலதிபரும், தமிழ்ஈழ முதல்வரும், சிறீலங்கா பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சி தலைவருமான திரு. அ. அமிர்தலிங்கம் வெளியிட்டுள்ள செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.



யாழ் வளாகத்தில்

## தந்தை செல்வா நெல்மணிஓவியக் கண்காட்சி

அச்சுவேலியைச் சேர்ந்த கலைஞர் துரைசிங்கம் துரைரத்தினம் (ரி.ரி.ஆர்.) உருவாக்கிய தமிழ்ஈழத்தந்தை மூதறிஞர் தந்தை செல்வா அவர்களின் நெல் மணி ஓவியம் இப்போது யாழ்வளாகத்தில் கண்காட்சிக்கென வைக்கப்பட்டிருக்கிறது. இந்த ஓவியத்தைப் பார்த்து வளாகத் தலைவர் பேராசிரியர் மெய்மறந்து ரசித்ததுடன், நெல்மணிக் கலைஞர் ரி.ரி. ஆரின் திறமையையும் பாராட்டி மகிழ்ந்தார். வளாக மாணவமாணவியர் இந்த ஓவியத்தைப் பார்த்து பாராட்டுகின்றனர். அடுத்து அனைத்திலங்கைக் கண்காட்சியிலும் தந்தை செல்வாவின் இந்த நெல்மணி ஓவியம் இடம்பெறவிருப்பதாக கலைஞர் ரி.ரி. ஆர். சுதந்திரனுக்குத் தெரிவித்தார்.

●

ஆணைக்கோட்டையில்

## கருத்தரங்கு

ஆணைக்கோட்டை மூத்த நயினார் கோவிலுக்கு அண்மையில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் கருத்தரங்கு ஒன்று 5-3-78 ஞாயிறு மாலை 5 மணிக்கு நடைபெறும் இக்கருத்தரங்கில் சுதந்திரன் ஆசிரியர் கோவை மகேசன், திருமதி அமிர்தலிங்கம், திரு. வி. தர்மலிங்கம் பா.உ. ஆகியோர் உரையாற்றுவார்கள். மகளிர் பேவை கிளையும் நிறுவப்படும்.

## சம்பந்தமூர்த்தி திடீர் இடமாற்றம் அரசியல் பழிவாங்கலா?

கடந்த பொதுத்தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணிசார்பில்கல்குடாத் தொகுதியில் நீதியமைச்சர் திரு.கே.டபிள்யூ. தேவநாயகத்துடன் போட்டியிட்டு ஆக ஐநூறு வாக்குகளால் வெற்றிவாய்ப்பை இழந்த அரசாங்க அதிகாரியான திரு. இ. சம்பந்தமூர்த்தி அவர்கள்திடீரென செங்கல



டியிலிருந்து திருகோணமலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதை அடுத்து, இது ஓர் அரசியல் பழிவாங்கல் நடவடிக்கையா என்ற கேள்வி கல்குடாத் தொகுதி மக்களின் உள்ளங்களில் எழுந்துள்ளது.

கடந்த தேர்தலின்போது தமக்குள்ள ஜனநாயக உரிமையின் அடிப்படையில் த.வி.கூ. வேட்பாளரை ஆதரித்த கல்குடா தொகுதியைச் சேர்ந்த பல அரசாங்கக் கூட்டுத்தாபன ஊழியர்கள் திடீர் திடீரென இடமாற்றம் செய்யப்பட்டுவருவதும் கூட்டணி ஆதரவாளர்கள் அரசியல் பழிவாங்கலுக்கும் தொல்லைகளுக்கும் உட்படுத்தப்பட்டுவருவதும் இது சம்பந்தமாக தேசிய அரசுப்பேரவையில் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் ஏற்கனவே கடுமையான ஆட்சேபனை எழுப்பியிருந்ததும் தெரிந்ததே.

ஆட்டைக்கடித்து மாட்டைக்கடித்து, மனிதனையும் கடித்ததுபோல், இப்போது கூட்டணி வேட்பாளர் திரு. சம்பந்தமூர்த்தியே இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இது சம்பந்தமாக எதிர்க்கட்சி தலைவரும், கூட்டணி பா. உக்களும் என்ன நடவடிக்கையெடுக்கப் போகிறார்கள் என்பதை கல்குடா தொகுதி மக்கள் கூர்ந்து கவனித்து வருகின்றனர். இது ஓர் அப்பட்டமான அரசியல் பழிவாங்கல் நடவடிக்கையென்றே சுட்டிக்காட்டப்படுகிறது.

இந்த இடமாற்றம்ரத்துச் செய்யப்படாத விடத்து வேலையை உதறியெறிந்துவிட்டு, இயக்கத்தின் முழுநேர ஊழியராக மாறி கல்குடாத்தொகுதியின் இயக்க அமைப்புவேலைகளில்ஈடுபட திரு. சம்பந்தமூர்த்தி முடிவு செய்துள்ளதாகவும் தெரிகிறது.

## உஸ்......!
## இது ரகசியம்

வடபகுதியில் உள்ள ஒரு தொகுதியில் ஒரு கட்சி அமைப்பாளர் பெப்ரவரி 4ம் திகதி (சு)தந்திர விழாக் கொண்டாடினாராம் ஒரு பொது மண்டபத்தில் கொண்டாடப்பட்ட இவ்விழாவில் அம்மண்டபத்தின் பல ரூபாய் பெறுமதியுள்ள திரைச்சீலையைத் திருப்பிக் கையளிக்கவில்லையாம். இது பற்றி அக்கட்சியின் தொகுதிச் செயலாளருக்கு சபையின் நிர்வாகம் கடிதம் கொடுத்தும் பலநாட்களாகியும் பதில் இல்லையாம். காந்தியம், தேசியம் பேசும் இந்த தர்மிஷ்டக் குஞ்சுகள் பொதுச்சொத்தில் அக்கறை காட்டுகிறார்கள் இல்லை. இவர்களின்முகச்சீலை கிழிந்து உண்மை உருவம் தெரியும் நாளை மக்கள்எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்கள்.

## விடுதலை இயக்க இளைஞர்கள் கைது

தமிழ் ஈழவிடுதலை இயக்கத்தைச் சேர்ந்த இளைஞர்கள் த. முத்துக்குமாரசாமி. நித்தியானந்தன், சந்திரகுமார், ஜோர்ஜ் ஆகிய நால்வரும் சி.ஐ.டி. பொலிசாரினால் மட்டக்களப்பில் வைத்து கடந்த 25-2-78 சனிக்கிழமை கைது செய்யப்பட்டதாகத் தெரிகிறது. கைது செய்யப்பட்ட இந்த நால்வரும் விசாரணைக்காக கொழும்புக்கு கொண்டு வரப்பட்டுள்ளனர்.

விசாரணையின் பின்னர் இவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.


இப்போது விற்பனையாகிறது!

# மெழுகுவர்த்தி

மேட்டுக்குடியிலே மூகிழ்த்த ஒரு மனிதன், தன்னைச் சுற்றிப் படர்ந்திருந்த சுகவாழ்வையும் புவன போகங்களையும் புறக்கணித்துவிட்டு தமிழ் விடுதலைப் போரின் ஈட்டிமுனையாக மாறினான். அந்த மறவனுடன் இலட்சியப்பாதைவழியே வழித்துணை சென்ற ஒருவனின் நாட்குறிப்புகள் இது.

நூலாசிரியர்: கரிகாலன்

சிலம்புச் செல்வர் ம. பொ. சி. யின் மதிப்புரையுடன்

கிடைக்கும் இடம்! சுதந்திரன் அலுவலகம் 238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

மற்றும் எல்லா சுதந்திரன் ஏஜண்டுகளிடமும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இ. போ. சபை இனவெறியர்களின் கூடாரமா?

# தமிழனின் கன்னத்தில் சிங்கள கண்டக்டர் அடி!

## "பறதெமிழா, கரிதெமிழா" என்று ஏச்சு!

## பமுனுகம பஸ்ஸில் நடந்த காட்டுமிராண்டித்தனம்!

18-2-78 அன்று சனிக்கிழமை இரவு 8.45 மணி. அப்போது புறக்கோட்டை பஸ் நிலையத்திலிருந்து பமுனுகம நோக்கி பஸ் ஒன்று புறப்படுகின்றது. நான் பஸ்சில் கடைசியாக இருக்கும் ஆசனத்தில் அமர்ந்திருக்கின்றேன். ஒவ்வொரு பஸ் தரிப்பிலும் பஸ கண்டக்டர் "கந்தானென் எகா நகின்ன" (கந்தானைக்கு அப்பால் செல்பவர்கள் ஏறுங்கள்) என்கின்றார். 23ஸ்ரீ5455 இலக்கமுள்ள அந்த பஸ் சுகததாச விளையாட்டு அரங்கின் முன் உள்ள பஸ்தரிப்பில் நின்றுவிட்டு பயணத்தைத் தொடர்கிறது.

பஸ்சில் ஏறிய ஒரு பிரயாணி சிங்களத்தில் "தொரலங்கா (பாலத்துறை)வுக்கு ரிக்கட் கேட்கின்றார். சிறிது முணுமுணுப்பின் பின்னர் கணடக்டர் அவருக்குரிக்கட் கொடுக்கின்றார். பஸ் பாலத்துறைச் சந்திக்கு வந்து விட்டது. பாலத்துறைக்கு ரிக்கற் எடுத்தவர் இறங்க பஸ் தரிப்பில் நின்றவர்கள் முண்டியடித்துக் கொண்டு உள்ளே ஏறுகிறார்கள்.

பஸ் ஏறும் வழிக்கு எதிர் திசையில் ஆசனத்துடன் நின்று கொண்டிருந்த கண்டக்டர் வேட்டியும், பனியனும், கழுத்தில் சால்வையும் போட்டிருந்த,ஐம்பது வயது மதிக்கத்தக்க அத்தமிழ் பெரியவரிடம் 'குவாட்ட' (எங்கே)என்று கேட்கின்றார். பெரியவர் 'பேலியகொடை' என்றது தான் தாமதம். பளீர் என அவரது கன்னத்தில் அடி விழுந்தது; அடியுடன் விட்டுவிடவில்லை "பறை தெமளா, கரி தெமளா பகினவா எளியட்ட" (பறைத்தமிழனே, இறங்குடா வெளியே) என்றார். பெரியவர் பேச்சு மூச்சின்றி, கண்டக்டரைத் தன்னும் பார்க்காமல் இறங்கி விட்டார்.

பஸ் மறுபடியும் புறப்பட்டு நீர் கொழும்புப் பாதையில் ஓடிக்கொண்டிருக்கின்றது. பஸ் கண்டக்டர் தான் ஒரு பேச்சாளர் என்ற நினைப்பில் திரும்பவும் உரத்த குரலில் "பற தெமழு, கரி தெமளு, யாபன கியொத் அபர கானவ, மே எனவா பஸ் ஏகே யன்ட' உன்ர அபி இட தென்டத? (பறை தமிழன் யாழ்ப்பாணத்துக்குப் போனால் எங்களுக்கு அடி இங்கு பஸ்சில் போவதற்கு வருகிறான். இவர்களுக்கு நாம் இடங் கொடுக்கவா?) என்றான்.

அவன் பேச்சைக் கேட்டு எனது இரத்தம் கொதித்தது. என்றாலும் பொறுமையாக இருந்தேன்.

அந்த பஸ்சில் என்னைத் தவிர வேறு எந்தத்தமிழனும் இருந்திருக்க மாட்டார்கள். சிறிது நேரத்தில் எனது பொறுமை என்னையும் மீறியது. கடைசி ஆசனத்தில் என் அருகில் இருந்த சிங்கள அன்பரிடம் பஸ் கண்டக்டருக்கு ஒருவருக்கு அடிப்பதற்குரிய உரிமை கிடையாதே என்றேன். ஆத்திரத்துடன் இருந்த அந்த சிங்கள அன்பரும் அப்போதுதான் கண்டக்டரை ஏசத்தொடங்கினார். "நீ அந்த ஏழை மனுதரை ஏன் அடித்தாய் உனக்கு அவரை அடிப்பதற்கு என்ன அதிகாரம் இருக்கிறது. சிறிது முன்பாக சுகததாச விளையாட்டரங்கின் முன்பாக ஏறிய ஒருவருக்கு பாலத்துறைக்கு ரிக்கற் கொடுத்தனீர் தானே அப்படியிருக்கையில் அந்ததமிழ் மனிதரை ஏன் அடித்தீர்" என்றார்.

இவரது கேள்விக்கணைகள் கண்டக்டரை ஆத்திரம் பொங்கவைத்தன! முன்பைவிட ஆவேஷம் அடைந்த கண்டக்டர் அம்மனிதரைப் பார்த்து பஸ்சில் உள்ள எல்லோரும் பேசாது இருக்கையில் நீர் ஒருவன்மட்டும் ஏன் தமிழனுக்காகப்பேசுகின்றீர் நீர் என்ன தமிழனுக்கு பணிந்து போகவா சொல்லுகின்றீர் என்றான்.

கண்டக்டருடன் கதைத்து வேலை இல்லை என்று அறிந்த நான் பக்கத்திலிருந்த சிங்கள அன்பரிடம் சொன்னேன். நான் இவ்விடயத்தை யிட்டு டிப்போவில் புகார் செய்யப்போகிறேன். சாட்சியாக வரவிருப்பமா என்றேன் அதற்கு அவர் உடன்பட்டு கந்தானையில் இறங்க வேண்டிய அவர் ஜா-எலவுக்கு ரிக்கற் எடுத்து என்னுடன் ஜா-எல டிப்போவுக்கு வந்தார். அன்றுசனிக்கிழமை அதுவுமல்லாது நேரம் 9:30 மட்டில் இருந்ததால் வேலை நாட்களில் வந்து புகார் செய்யும்படி ஒரு இ.போ.ச. ஊழியர் மூலமாக கேட்கப் பட்டோம்.

மேற்படி புகாரை நான் கடித மூலம் சிங்கள அன்பரின் சாட்சியுடன், ஜனாதிபதி, பிரதமர், போக்குவரத்து அமைச்சர், நீதி அமைச்சர், இ.போ.ச. பிரதம அதிகாரி, ஜா-எல டிப்போ மனேசர், ஜா-எல தொகுதி பாராளுமன்ற உறுப்பினருக்கும் அனுப்பவிருக்கிறேன்.

குறிப்பு! 18-2-78 சனிக்கிழமை இரவு 9 மணியளவில் பாலத்துறையில் கன்னத்தில் அந்தச் சிங்கள கயவனால் அடிவாங்கிய பெரியவர் இதைப் படிக்க நேர்ந்து அவர் என்னுடன் நேரடித்தொடர்புகொண்டால்நான் அக்கயவனுக்கு எதிராக எடுக்கவிருக்கும் நடவடிக்கைகளுக்கு மிகவும் உதவியாக இருக்கும்.

கே. சோமசுந்தரம்
150, கொழும்பு வீதி,
ஜா-எல.





பாவியுங்கள்

றோயல் நீலத்தினைத் தயாரித்து விற்பனை செய்யும் சிவா இன்டஸ்ரீஸாரின் மற்று மோர் தயாரிப்பு

றோயல் ஜெலி கிறிஸ்டல்

மற்றும் ஏனைய தயாரிப்புகள்

றோயல் பேக்கிங்பவுடர்
றோயல் கஸ்டட் பவுடர்
றோயல் கோண் பிளவர்
றோயல் பிஸ் மக்ஸ்
றோயல் நீலம்

தயாரித்து விற்பனை செய்வோர்

சிவா இன்டஸ்றீஸ்

112 1/3 4ம் குறுக்குத் தெரு, கொழும்பு-11


# அங்கையற்கண்ணியின் சதங்கையொலி!

ஓர் இனத்தின் தனித்துவத்துக்கும் சிறப்புக்கும் எடுத்துக்காட்டாக மிளிர்வது அந்த இனத்தின் கலை, கலாச்சாரங்கள் தாம், கலை கலாசாரங்களை கண்ணெனப் பேணிவளர்க்காத ஒரு சமுதாயம் நீண்டகாலம் நிலைத்து வாழமுடியாது. எத்தனையோ ஆபத்துக்கள் எதிர்ப்பட்டும், தமிழ் சமுதாயம் அழிந்துவிடாதபடி தப்பிப்பிழைத்து தரணியில் வாழ்கிறதென்றால் - அதற்கு ஒரே காரணம் தமிழர்கள் தங்கள் கலை, கலாசாரத்தை எந்தநிலையிலும் கட்டிக் காத்து வருவதுதான் என்று துணிந்து கூறமுடியும்.

மொழியுரிமை, இன உரிமை, நாட்டு விடுதலைப் போராட்டங்கள் ஒரு புறம் நடைபெறுகின்ற அதே நேரத்தில் நம் இனத்தின் கலை கலாசாரத்தை கட்டிக் காத்துவளர்த்திடும் பணிகளும் மறுபுறம் நடைபெறத்தான் வேண்டும். அந்த அடிப்படையில், தமிழ்க்கலை வளர்த்திட இதோ செல்வி அங்கையற்கண்ணியெனும் புதிய ஆடலரசியொருத்தி புறப்பட்டிருக்கிறார்!



ஆயுதம் ஏந்திய காக்கிச் சட்டைக் காவலர்கள் சூழ்ந்துநிற்க, தமிழர்விடுதலை இயக்கம் நடத்திய சட்ட மறுப்பு ஊர்வலங்களில் துணிகரமாக முன்பு வீர நடைபோட்ட அதே செல்வி அங்கயற் கண்ணியின் கால்கள் சதங்கை கட்டி ஆடிய காட்சியை வீரசிங்கம்மண்டபத்தில் 19-2-78ல் கண்டு மெய்மறந்தேன்!

தமிழ்த்தேசிய உணர்விலே ஊறி, இனவிடுதலைக்காக எண்ணரிய தியாகங்களை செய்துவரும் திரு.வேதநாயகம், திருமதி வேதநாயகம் ஆகியோரின் திருச்செல்விக்கு தமிழ் அன்னையின் [illegible] முண்டோ? பெயர்தான் 'அரங்கேற்றமாக' இருந்ததே தவிர—ஓர் அனுபவமிக்க ஆடற்கலையரசிபோல வெகு இயல்பாக இருந்தன செல்வி அங்கையற்கண்ணியின் ஆடல்கள்! அந்த அளவுக்கு ஆடற்கலையரசியாக செல்வி அங்கயற்கண்ணியை சிருஷ்டித்த பெருமை திருமதிலீலா ஆறுமுகையாவுக்கே உரியது.

மாதா, பிதா, குரு, தெய்வத்துக்கு ஆரம்பத்தில் வணக்கமும் மரியாதையும் தெரிவித்து தொடங்கப்பட்ட இந்த அரங்கேற்றத்தில், முறையே அலாரிப்பு, ஜதீஸ்வரம், சப்தம், வர்ணம், தில்லாறு, பதம், ஆகியன இடம்பெற்றன. செல்வி அங்கயற்கண்ணியின் அங்க அசைவுகளும் லாவகமான அபிநயமும், பாதாதிதேசம் வரை பரதத்தின் நுணுக்கங்கள் நிறைந்து காணப்பட்டதும் பார்ப்போரை மெய்மறக்கவைத்தது.

நாதசுர இசைக்கேற்றபடி 'தில்லாறு' ஆடியதும், கவிஞர் காரை சுந்தரம்பிள்ளையின் தமிழ்த்தாய் வணக்கப் பாடலுக்கு பதம்பிடித்தும் மயில், குறத்தி நடனங்களும் பலேஜோர்!

யாழ்நகர் ஈன்றெடுத்த நம் அருமைக் கலைச்செல்வி அங்கயற்கண்ணி, தமிழ்ஈழ முதல்வர் அவர்கள் வாழ்த்தியதுபோல ஆடற் கலைத்துறையில் மேலும் முன்னேறி தமிழ்ஈழத்தின் பெருமையை — தமிழ்க்கலையின் மேன்மையை—உலகெங்கும் பரப்பிட சுதந்திரன் வாழ்த்துகிறான்.

—கோ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரிமையன்றி சலுகைவேண்டாம்

மங்கள தேரோவின் மகஜர் பற்றி "டெய்லி மிறர்" பத்திரிகையிலும், தமிழ் ஈழத் தேசிய இனத்தின் விடுதலைக்குரலான "சுதந்திரனி"லும் (22-2-78) படித்தேன். அதை யொட்டிய விளக்கமொன்றை இங்கு கூற விரும்புகின்றேன்.

இலங்கை வாழ் சிறுபான்மையினர் யாரென்பதை நன்ருகத் தெரிந்து வைத்துள்ள சங் மங்கள தேரோ அவர்கள், இச் சிறுபான்மையினர் தொடர்ந்து கேட்டும், வற்புறுத்தியும் வரும் சுயநிர்ணய உரிமை பற்றிக் கண்டனம் தெரிவித்தும், கண்டிப்பான நடவடிக்கை எடுக்க அரசாங்கத்தைத் தூண்டியும் வருகின்ருர்.

"சிங்கள மக்களும் சிறுபான்மையாகி கஷ்டப்பட்டு வருகின்றனர்" இதிற் சிறுபான்மையென்று அவர் குறிப்பிடுவது, தமிழராகிய நாம் சிறுபான்மையினராக இருப்பதைப் போன்றதல்ல என்பதை அவர் அறிந்திருப்பார். சிங்களக் குழுக்கள் சிறுபான்மையாகி கஷ்டப்படுகின்ற அதே வேளையில், நாம் சிறுபான்மையினராகி அடிமைப்பட்டு வாழ்கின்ருேம். பல தொல்லைகளுக்கு மத்தியில் வாழ்ந்து வரும் சிங்களக் குழுக்களுக்கு மறுவாழ்வு அளிக்கப்பட வேண்டும் என்று தேரோ அவர்கள் கேட்கும் அதே வேளையில், சிறுபான்மையினராகக் கருதப்படும் நாம் சுயநிர்ணய உரிமை மூலம் உயிர் வாழக் கேட்கின்ருேம்.

"மறுவாழ்வு" என்பது மனித அடிப்படைத் தேவையையொட்டி எழுவது. உயிர் வாழக் கேட்பது மனித அடிப்படை உரிமையையொட்டி எழுவது. அடிப்படைத் தேவை அடிப்படை உரிமை என்பவற்றிற்குப் பொருள் தெரியாது நிற்கின்ருரே என்பதை எண்ணி அதிசயப்படுகின்றேன். சுயநிர்ணய உரிமை மூலம் உணவு, உடை, இல்லிடம் ஆகிய அடிப்படைத் தேவைகளை நாம் கிஞ்சித்தும் கேட்கவில்லை. அடிப்படை உரிமையில்லாத இடத்து அடிப்படைத் தேவைகள் எமக்கு எப்படி வரும்? அப்படி எழுந்தாலும் கூட தன்மானத்தோடு தமிழன் எப்படி வாழ முடியும்? மனித உரிமையைப் புரிந்து கொள்ளமுடியாது நிற்பவர்கள் காந்தியோடு இணைந்து செயலாற்றிய விதம் என்ன? அகிம்சை, சாத்வீகம் ஆகியவற்றினுல் அறப் போராட்டம் நடத்திய காந்தியடிகளுடன் இணைந்து நின்றவர்கள் மத சுதந்திரம் திட்டவட்டமாக வரையறை செய்யப்படவேண்டும்; சிங்களமே நாட்டின் தேசிய மொழியாக நீடிக்க வேண்டும்; சுயநிர்ணய உரிமை கேட்டால் அவர்களின் சொத்து, அரசியலுரிமை ஆகியன உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பறிமுதல் செய்யப்படவேண்டும் என்று கேட்பது எப்படி? அகிம்சையும், தர்மமும், சாத்வீகமும் அலட்சியம் செய்யப்படுகின்ற அதே வேளையில் அண்ணல் காந்தியுடன் இணைந்து நிற்பது எப்படி?

மத சுதந்திரம் மனிதனது தனிச் சுதந்திரம் மதச் சுதந்திரத்தில் கைவைப்பது மனச்சான்றில் கைவைப்பதாகும். தார்மீகம் பேசிக் கொண்டு மதச் சுதந்திரத்திற்கு வரையறை கேட்பதன் மர்மம் என்ன? மனிதனின் ஆன்மீக வளர்ச்சியில் அக்கறை காட்டும் தார்மீக அரசு, மத சுதந்திரத்தைத் திட்டவட்டமாக வரையறை செய்ய முற்படமுடியுமா?

சுயநிர்ணய உரிமைக் கோரிக்கை ஒரு இனத்தைப் பொறுத்த மட்டில் சட்ட விரோதமாக இருக்கமுடியாது. காரணம் — குறிப்பிட்ட இனம் தனது கலை கலாச்சாரம், மொழி ஆகியவற்றை வளர்க்கவும், அதைப் பாவிக்கவும், பேணிப் பாதுகாக்கவும் உரிமையுடையது. சுயநிர்ணய உரிமையின்படி வாழத் தலைப்படும்போது அந்த உரிமையை சலுகையாக மாற்றியமைக்க முற்படுவது தவருகும். உரிமை ஒருவனோடு கூடப் பிறந்தது. சலுகை ஒருவனை அடிமைப் படுத்துவது. தமிழ் இனத்தைப் பொறுத்தவரையில் நாம் கேட்பது உரிமையேயன்றி சலுகையல்ல என்பதையும், மனித உரிமையே தார்மீகத்தின் பிறப்பிடம் என்பதையும் சொல்லி வைக்க விழைகின்றேன்.

—அருட்செல்வி ஐடா யோசவ்

121 பிரதான வீதி,
யாழ்ப்பாணம்,

# கனடாவில் பிரெஞ்சுக்காரர்களுக்குள்ளதுபோல ஈழத் தமிழர்களுக்கு சுயாட்சி வழங்க ஜே. ஆர். நடவடிக்கை எடுப்பாரா?

## சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம் கேள்வி!

"சிறீலங்கா சிந்திக்குமா?" என்ற தலைப்பில் தமது 'செங்கோல்' ஏட்டின் 12-2-78 இதழில் தமிழரசுக் கழகத் தலைவரும் சென்னை சட்டமன்ற மேல்சபைத் தலைவருமான சிலம்புச்செல்வர் ம. பொ. சிவஞானம் எழுதியுள்ள ஆசிரியத் தலையங்கம் பின்வருமாறு;—

ஸ்ரீலங்கா பிரெஞ்சு நாட்டிலுள்ள ஜனதிபதி ஆட்சி முறையை பிப்ரவரி 4 ஆம் தேதி முதல் ஏற்றுக் கொண்டிருக்கிறது. இந்த மாறுதலையொட்டி, இதுவரை அந்த நாட்டில் பிரதமராக இருந்த ஜெயவர்த்தனே ஜனதிபதியாகியிருக்கிருர். இனி அவர்தான் ஸ்ரீலங்கா அரசின் தலைமை நிர்வாகி, அவருக்குக் கீழ்ப்பட்ட நிலையில் பிரதமர் ஒருவரும் இருந்து வருவார்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள இந்த அரசியல் மாறுதலை வரவேற்று விழாக்கொண்டாடப்பட்டிருக்கிறது. ஆனுல், அந்த விழாவில் பங்கு கொள்ள மறுத்திருக்கின்றனர் இலங்கையின் மக்கள் தொகையினரில் நான்கில் ஒரு பங்கினராகவுள்ள தமிழர்கள்! இலங்கையை ஒட்டு மொத்தமாக நோக்கும்போது அங்குள்ள தமிழர், சிங்களவரையும் விடவும் எண்ணிக்கையில் குறைந்த சிறுபான்மையினராக இருக்கலாம். ஆனுல், அவர்கள் சிதறிக் கிடக்கும் சிறுபான்மையினர் அல்லர்; வடக்கு, கிழக்கு மாநிலங்களிலே சேர்ந்தாற் போல் வாழும் இருவேறு பிரதேசத்தினர். ஆகவே, அவர்களுடைய மொழியான தமிழ், சிறுபான்மையினரின் மொழியாக மட்டுமல்லாமல், இலங்கையில் பிரதேச மொழிகளிலே ஒரு மொழியாக இருந்து வருகிறது. மற்ருெரு பிரதேச மொழி சிங்களம், ஆகவே இந்தஇரண்டு மொழிகளையும் சம நிலையில் ஆட்சி மொழிகளாக ஏற்க ஸ்ரீலங்காஅரசு கடமைப்பட்டிருக்கிறது. இதுபோல, பிரதேச சுயாட்சி அடிப்படையில் தமிழர் மிகுதியாக வாழும் பிரதேசத்தைத்தனியரசு மாநிலமாக்கச் செய்து தமிழ் மாநிலமும், சிங்கள மாநிலமும் இணைந்த சமஷ்டி நாடாக ஸ்ரீலங்கா இருந்து வரலாம்.

இதைத்தான் காலமெல்லாம் இலங்கைத் தமிழர் கோரி வந்தனர். ஆனுல், இலங்கையில் ஆளும் இனத்தவராகிவிட்ட சிங்களவர் இதனை ஏற்கவில்லை. அதனுல், சுதந்திரத் தமிழ்நாடு கிளர்ச்சி தோன்ற இடந்தந்து விட்டனர்.

இந்த நிலையில்தான் ஸ்ரீலங்காவில் பிரெஞ்சு நாட்டிலுள்ளதைப்போன்று ஜனதிபதி ஆட்சி முறை தோன்றியிருக்கிறது. இதனுல் இலங்கைத் தமிழர் பிரச்சினை தீருமா? ஜனதிபதி ஆட்சி முறை அமுலுக்கு வந்தபின்னும் பார்லிமெண்டரில் ஜனநாயகம் நீடிக்கிறது இலங்கையிலே! ஆம்; இலங்கை ஜனதிபதி சர்வாதிகாரியல்ல ஆனுல் பிரதமராக இருந்த காலத்தை விடவும் கூடுதலான அதிகாரத்தைப்பெற்றவராகி விட்டார் ஜனதிபதியாகிவிட்ட ஜெயவர்த்தன. இந்த அதிகாரத்தைப் பயன்படுத்திச் சிங்களவரின் ஆதிக்க வெறியைத் தணிக்கவும், தமிழரின் அரசுரிமைக் கோரிக்கையை அமுல் நடத்தவும் திரு. ஜெயவர்த்தன துணிய வேண்டும்.

ஜனதிபதி ஆட்சி முறை விஷயத்திலே பிரான்சிலுள்ள பிரெஞ்சுக்காரரைப் பின்பற்றிய சிங்களவர்கள், அதே போல. சமஷ்டி சர்க்கார் வேண்டுமென்பதிலே இலங்கைத் தமிழர்கள் கனடாவிலுள்ள பிரெஞ்சுக்காரர்களையே பின்பற்றுகின்றனர் என்பதனை மறந்துவிட வேண்டாம்.

ஆம்; கனடா, இலங்கையைப் போன்று பிரெஞ்சு மொழிப் பிரதேசத்தையும் இங்கிலீஷ் மொழி பிரதேசத்தையும் கொண்ட இரு மொழி நாடாகும். அதனுல், அந்த நாட்டிலே பிரெஞ்சு மொழிப்பிரதேசமும் இங்கிலீஷ் மொழிப் பிரதேசமும் தனித்தனி அரசுகளைப் பெற்றுள்ளன. அதனதன் பிரதேசத்தில் அதனதன் மொழியே ஆட்சி மொழியாக இருந்து வரக்காண்கிருேம். இந்த இரு மொழிப் பிரதேசங்கள் சம அந்தஸ்தில் இணைந்த சமஷ்டி நாடாகவே கனடா இருந்து வருகிறது. அந்த சமஷ்டி அரசிலே பிரெஞ்சு — ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளும் சம அந்தஸ்தில் ஆட்சி மொழிகளாக இருந்து வருகின்றன. அதே முறையைத்தான் சிறிலங்காவில் அமுல் நடத்த வேண்டுமென்று இலங்கைத் தமிழர்கள் கோரி வருகின்றனர். அதாவது கனடாவிலுள்ள பிரெஞ்சுக்காரர்கள் நிலையில் சிறிலங்காவில் தாங்கள் நடத்தப்பட வேண்டுமென்று கோருகின்றனர்.

பிரான்சிலுள்ள பிரெஞ்சுக்காரர்களுக்குள்ள அரசியல் அந்தஸ்தைப் பெற்றுப் பெருமையடைய இலங்கைச்சிங்களவருக்கு உரிமையுண்டென்ருல், கனடாவில் பிரெஞ்சுக்காரர்கள் அனுபவிக்கும் அரசியல் அந்தஸ்தைத் தாங்களும் பெறவேண்டுமென்று இலங்கை வாழ் தமிழரும் கோர உரிமைஉண்டு தானே!

ஸ்ரீலங்கா ஜனாதிபதி ஆட்சி முறையை ஏற்றுக் கொண்டதால், புதிய பலம் எதையும் பெற்றுவிட்டதாக நமக்குத் தோன்றவில்லை, ஆனுல் கனடாவிலுள்ளஅரசு இனங்கள் இணைந்த சமஷ்டி முறையை ஏற்றுக்கொள்ளுமானுல், அதைவிட வலிமை மிக்க பாதுகாப்பு அதற்கு வேறு இருக்கமுடியாது.

ஸ்ரீலங்காவில் நடைபெற்ற ஆட்சிமுறை மாறுதல் விழாவிற்கு இந்தியாவின் சார்பில் உள்துறையமைச்சர் திரு. சரண்சிங் சென்று திரும்பியிருக்கிருர். அயல் நாட்டமைச்சர் வாஜ்பாய்தான் சென்றிருக்கவேண்டும். ஒருவேளை, இலங்கை சம்பந்தப்பட்டவையெல்லாம் இந்தியாவின் உள்நாட்டுப் பிரச்சினை யென்று டில்லியிலுள்ள ஜனதா அரசு கருதி உள்துறை அமைச்சரை அனுப்பியது போலும்!

அது எப்படியாயினுஞ் சரி; கொழும்பு சென்ற திரு. சரண்சிங், புதிய ஜனதிபதிக்கு வாழ்த்துக் கூறியிருக்கிருர். அது சரிதான்; அதற்காகத்தானே அவர்போனுர்; அங்கும் இடதுசாரி மனமுடைய ஒரு பெண்மணியின் தலைமையிலிருந்த ஆட்சி வெளியேறி, வலதுசாரி ஆண்மகனின் ஆட்சி தோன்றியிருப்பதால், இந்திராவைப் பகைக்கும் திரு. சரண்சிங்குக்குத் தனி மகிழ்ச்சி! அதனுலும் கொழும்பு செல்ல அவரைத் தேர்ந்தெடுத்தது போலும் ஜனதா ஆட்சி! சென்ருரே, "இலங்கைத் தமிழர் பிரச்சினையும் தீர்க்கப்பட வேண்டும்" என்று ஜனதிபதி ஜெயவர்த்தனவுக்கு திரு. சரண்சிங் ஆலோசனை கூறியிருக்கலாம். அப்படி எதுவும் கூறியதாகத் தெரியவில்லை. நல்லவேளையாக இலங்கைத் தமிழர் நடத்திவரும் கிளர்ச்சிக்கு எதிராக எதுவும் கூருமல் திரும்பி வந்தாரே!


வெளிவந்துவிட்டது

"தமிழினம் தனக்கென ஓர் உரிமை
சேட்பதே தவருகத் தெரிகின்றது
பொது உடைமைத் தோழர்கட்கு ...ஆசிரியர்.

முதலைக் கண்ணீர் வடிக்கும்
பொய்ச் சோஷலிஷவாதிகள் பற்றிய
ஆணித்தரமான கருத்துக்கள் —

தமிழ் ஈழத்தில்
எமது தோழர்கள்

ஆக்கியோன்: கே. எஸ். ஏ கபூர், விலை 2/- வி.பி.பி.உண்டு.

ஸ்ரீகாந்தா அச்சகம் - புத்தகசாலை
213, காங்கேயன்துறை வீதி,
யாழ்ப்பாணம். தொ. பே. 256.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழனே விழி...

—3-ம் பக்கத் தொடர்

இன்று ஆட்சிபீடம் ஏறி உள்ள அரசாங்கக்கட்சி அன்று தேர்தல் காலத்தில் தரப்படுத்தலை நீங்குவோம் என்று கூறியபோது ஆகா! என்று வாயைப் பிளந்து கரகோஷம் செய்து பதவி ஏற்றிய அதே இனம் இன்று வாக்குறுதி நிறைவேற்றப் பட முன்பே சீறி எழுவது ஏன்?

ஆகா! என்ற அதே இனம் ஒகோ! இதுதானு விஷயம் என்று வெதும்பி எழுந்து வெருட்டல் செய்வது ஏன்? இவை எல்லாம் தமிழினத்துக்கு புதியதல்ல. செங்குருதி சிந்தி சீரழிந்து கொண்டிருக்கும் தமிழினத்துக்கு இது ஒரு சிறு துரும்பு.

புள்ளி விபரப்படி தமிழின மாணவ மணிகள் அதிகளவில் பல்கலைக்கழகத்தை முற்றுகையிடப் போகிறார்களே நம்நாடு தமிழ் டாக்டர்கள், பொறியியலாளர்கள், பட்டதாரிகள் மயமாகி முடிவில் தமிழீழமென்று கேட்டவர்கள் முழுஈழத்தையுமே பிடித்து விடப்போகிறார்கள் என்று தான் அலறிப்புடைத்து அங்கலாய்க்கிறதா? அந்த இனம்.

இனக்கலவரத்தில் இன்னுயிர்ஈந்து இரத்தக்காட்டாறு ஓடி தமிழினமே அழுது அரற்றிய இனக்கலவர சாயல்கள் மறையுமுன்பு பூவிழந்து, பொட்டிழந்து புனித மழலைச் செல்வங்களை இழந்து, செங்குருதி ஆருய் ஓடிய அந்தக் காட்சிமறையுமுன்பே தமிழினமே உன்னை எதிர்த்து உன் வாழ்வை அழித்த தரப்படுத்தலை நீக்குவதை எதிர்த்து சிங்கள இனத்தின் சிறிசுகள் சீறி எழ வழி வகுத்து பகிஷ்கரிப்பையும் தூண்டியது. தமிழினமே! உன்னை கல்வியால் அழித்து ஏப்பமிடவே.

தமிழினத்தின் கல்வியைச் சுவடு தெரியாது அழிக்க ஈழமணித்திரு நாட்டை அடக்கி ஆண்டிடவே திட்டம் தீட்டிச் செயற்பட்டு வருகின்றனர்.

## நீதியமைச்சரின்..,

—1-ம் பக்கத் தொடர்

சம்பந்தமாக வாதாடினார்கள். இறுதியில் எதிரியைக் குற்றவாளியாகத் தான் கண்டிருப்பதாக நீதிபதி தீர்ப்பளித்தார். எதிரியான சட்டத்தரணி முறைப்பாட்டுக்காரரான நல்லரெத்தினத்துக்கு தான் பணம் பெற்றதன் அத்தாட்சியாக பற்றுச்சீட்டினை வழங்கியிருந்தபோதும் கூட பணத்தைப் பெருமல் தான் பற்றுச்சீட்டு வழங்கியதாக நீதிமன்றத்தில் கூறினார். இதைத் தான் நம்பவில்லை என்றும் நீதிபதி தெரிவித்தார்.

தனது தீர்ப்பின் நியாயங்களை பெப்ரவரி 24ந் திகதியும், தண்டனையை இந்த மாதம் 3ம் திகதியும் வழங்குவதாக அறிவித்த நீதிபதி, எதிரியின் கைவிரல் அடையாளங்களை எடுக்கும்படியும் 1000 ரூபா சரீரப் பிணையில் அவரைச் செல்லும்படியும் கட்டளையிட்டார்.

---

தமிழினமே! இவையெல்லாம் உனக்குச் சொல்வதென்ன? தரப்படுத்தலுக்காக இத்தனை இன்னல்பட்ட அரசு உனக்கு உரிமை வழங்க எங்கே முன்வரப் போகிறது?

தமிழீழத்தில் தான் எம் வாழ்வு மலர முடியும் எனவே சிந்தித்துக்கொள்! தமிழினமே விழிப்பாயிரு! மாற்றானின் மனம் இன்னும் மாறவில்லை. மயங்கிய வாழ்வு மலர்ந்திடத் தமிழீழத்தை மலரவை!

பொறுத்தது போதும் தமிழ்த்தலைவர்களே தமிழீழம் அமைத்திட தாமதமின்றிப் புறப்படுங்கள்!

—"வன்னிக் குஞ்சன்"


சன்சயின்
சோப்
ஈழம் எங்கும் விற்பனையாகிறது
- இது ஓர் லாலா தயாரிப்பு -
லாலா சோப் தொழிற்சாலை
அச்சுவேலி

செல்லமகால் [கொட்டாஞ்சேனை]
எம். ஜி. ஆர். (இரு வேடங்களில்)
வாணிஸ்ரீ, நிர்மலா, பி. எஸ். வீரப்பா,
தேங்காய் சீனிவாசன் மற்றும் பலர் நடித்த-
ஊருக்கு உழைப்பவன்
(ஈஸ்ட்மன் கலர்)

கெயிட்டி [கொட்டாஞ்சேனை] 11-வது வாரம்
முத்துராமன், ஸ்ரீகாந்த், வி. கே. ராமசாமி
தேங்காய் சீனிவாசன், ஜெயசித்ரா
எஸ். வி. ராமதாஸ், குமாரி பத்மினி
சுருளிராஜன், எம். பானுமதி
மாஸ்டர் குமார், ஜெயவாணி
ஐ. எஸ். ஆர். கண்ணையா, ஹலம்
— நடித்த —
இன்ஸ்பெக்டர் மனைவி

4-வது வாரம்
ரீகல் (மட்டுநகர்)
மூன்று முடிச்சு

கிங்ஸ்லி (கொழும்பு)
தெய்வமகன்
10-ம் திகதி முதல்
ரவிச்சந்திரன், கே. ஆர். விஜயா நடித்த
ஜானகி சபதம்

வெலிங்டன் (யாழ்நகர்)
காட்டு ரோஜா
எதிர்பாருங்கள்
சிவாஜி, கே. ஆர். விஜயா நடித்த—
கிரகப் பிரவேசம்
ஈஸ்ட்மன்கலர்

கெப்பிட்டல் (கொழும்பு) 5வது வாரம்-
கே. ஆர். விஜயா – ஜெய்சங்கர் நடித்த-
மேயர் மீனாட்சி

4-வது வாரம்
பிளாசா (கொழும்பு) லிடோ (யாழ்நகர்)
முத்துராமன், சுஜாதா, சிவகுமார்
பத்மபிரியா -நடித்த
உறவு சொல்ல ஒருவன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு - 12, 194 ஏ. பண்டாரநாயக்கா வீதியிலிருக்கும் சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் நிறுவனத்தாரால் 1978ம் ஆண்டு மார்ச் 3-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது; அச்சுப்பதிப்பு: வஸ்தியன் அச்சகம் பிரதான வீதி, யாழ்ப்பாணம்